Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 திருவள்ளுவர் ஆண்டு- 2036 வைகாசி-28 11-06-2005 சனிக்கிழமை ஓசை 113


S.M கோல்ட் ஹவுஸ்
வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளை உங்கள் விருப்பத்திற்கேற்ப தெரிவு செய்து பெற்றுக்கொள்ள
S.M கோல்ட் ஹவுஸ்
இல:-46A, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
உரிமையாளர்:- S.M.சண்முகரத்தினம்.
T.P: 024-222 4247 (சி-12121).

## பொதுக்கட்டமைப்பு விவகாரம்

# மகாநாயக்கர்களுடன் சனாதிபதி பேச்சு; அவர்களின் அனுமதியுடனேயே இறுதி முடிவு!

## சனாதிபதி சந்திரிகா எழுத்து மூலம் உறுதி

(கொழும்பு)

**நான்கு பௌத்த பீடங்களின் மகாநாயக்கதேரர்களை நேற்று மாலை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க சனாதிபதி மாளிகைக்கு நேரடியாக அழைத்துப் பேசியுள்ளார். இதேவேளை, மகாநாயக்கர்கள் அனுமதியின்றி பொதுக்கட்டமைப்பு கைச்சாத்திடப்படமாட்டாது எனவும் சனாதிபதி சந்திரிகா பீடாதிபதிகளுக்கு எழுத்து மூலம் உறுதி வழங்கியுள்ளார்.**

விடுதலைப்புலிகளுடன் பொதுக்கட்டமைப்பு போன்ற எந்தவொரு உடன்பாட்டினையும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டாமென நான்கு பௌத்த பீடாதிபதிகள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை சனாதிபதிக்கு கடிதமொன்றை அனுப்பிவைத்திருந்தமை தெரிந்ததே. அதற்கு பதிலளிக்கும் வகை யில் சனாதிபதி நேற்றுக் காலை கடித மொன்றை அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.அதில் மகாநாயக்கர் (12ஆம் பக்கம் பார்க்க)

## தேசவிரோதிகளின் தாக்குதலில் இரு போராளிகள் வீரச்சாவு

கடந்த புதன்கிழமை கோமாரி என்னும் இடத்தில் தேசவிரோதக் குழுவினரின் தாக்குதலின்போது இரண்டு போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

□ லெப்டினன் சுதனரஞ்சன்

(சுப்பிரமணியம் கிருஸ்ணமூர்த்தி - பாளக்குடா திருக்கோயில், அம்பாறை)

□ வீரவேங்கை நிவேகரன்

(தவராசா தர்சனகுமார் - பானமைப் பற்று, கோமாரி-1 அம்பாறை) ஆகிய போராளிகளே வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

இம்மாவீரர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## சனாதிபதி பிரதமர் சந்திப்பு

(கொழும்பு)

நேற்றிரவு சனாதிபதிக்கும், பிரதமருக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று இடம்பெற ஏற்பாகியிருந்தது. இதில் நேற்று முன்தினம் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் கலந்தாலோசித்த விடயங்கள்இதன்போது எடுத்து விளக்கப்படவிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# பொதுக்கட்டமைப்பு நிலைப்பாட்டை விலக்கிக்கொள்ள சனாதிபதிக்கு 15 ஆம் திகதி வரை காலக்கெடு!

### -அரசிலிருந்து வெளியேறப் போவதாகவும் ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

சிறிலங்கா சனாதிபதி இம் மாதம் 15ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு முன்னதாக பொதுக்கட்டமைப்பு தொடர்பான நிலைப்பாட்டை வாபஸ் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்காவிட்டால் அரசாங்கத்திலிருந்து விலகப்போவதாக மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த ஜே.வி.பி கட்சியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க இதனைக் கூறினார்.

பொதுக்கட்டமைப்பை தோல்வியுறச் செய்வதற்காக உயிரைப் பணயம் வைத்துப் போராடுவதற்கு தமது கட்சி தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

எதிர்வரும் 15ஆம் திகதி நள்ளிரவுக்கு முன்னர் பொதுக்கட்டமைப்பு (12ஆம் பக்கம் பார்க்க)

# உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பை எதிர்த்து சனாதிபதிமாளிகை அருகே இரு ஆர்ப்பாட்டங்கள்!

### ஆர்ப்பாட்டக்காரரை அகற்ற கடும் பிரயத்தனம்



பிக்குகள் மீது கண்ணீர்புகைப் பிரயோகம்.

(கொழும்பு)

உத்தேசிக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று மாலை இரண்டு இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்றுள்ளன. ஜாதிகஹெல உறுமயவும், தேசிய பிக்குகள் முன்னணியும் இதனை ஏற்பாடு செய்திருந்தன. ஜாதிக ஹெல உறுமய கட்சி ஏற்பாடு செய்திருந்த எதிர்ப்பு ஊர்வலம் கொழும்பு விகாரமாதேவி பூங்காவிற்கு அருகில் இருந்து கொழும்பு கோட்டை வரை இடம் பெற்றது.

இதனால் குறித்த பிரதேசங்களில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

இதேவேளை, தேசிய பிக்குகள் முன்னணி ஏற்பாடு செய்திருந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் புஞ்சிபொரளை யிலிருந்து ஆரம்பமாகி மருதானையூடாக கொழும்புக் கோட்டை வரை இடம்பெற்றது. இதனால், வீதியெங்கும் வாகன நெரிசல்கள் ஏற் (12ஆம் பக்கம் பார்க்க)

## அரச அச்சக பாதுகாப்பு திடீரென அதிகரிப்பு

(கொழும்பு)

அரசாங்க அச்சகத்தின் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் திடீரென அதிகரிக்கப்பட்டிருப்ப தாகவும் இதனால் சனாதிபதி சந்திரிகா முக்கியமான வர்த்தமானி அறிவித்தல் எதனையும் வெளியிடலாம் எனவும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாராளுமன்ற கலைப்பு, பாராளுமன்றத்தை நிறுத்தி வைத்தல் போன்ற ஏதாவது முக்கியமான அறிவித்தலை வெளியிடுவதற்கான முன்னேற்பாடாக இது இருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (12ஆம் பக்கம் பார்க்க)

## உறுதியான நிலைப்பாட்டை சனாதிபதி அறிவிக்க வேண்டும்

### காலங்கடத்துவதற்கு ஐ.தே.க கண்டனம்

பொதுக்கட்டமைப்பு விடயத்தை அரச தலைவர் சந்திரிகா காலங்கடத்திக் கொண்டு போகாமல் உறுதியான முடிவெடுத்து அதனை நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பு விவகாரத்தினால் நாட்டில் இன்று அரசியல் ஸ்திரமின்மை தோன்றியிருப்பதாகவும், பாராளுமன்ற செயற்பாடுகளைக் கூட இது பாதித்திருப்பதாகவும் ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் மாலை அறிக்கை ஒன்றை விடுத்திருக்கின்றார். பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக அரச (12ஆம் பக்கம் பார்க்க)

## சனாதிபதியின் உறுதிமொழி நிராகரிப்பு போராட்டத்தைத் தொடர தேரர் முடிவு

(கொழும்பு)

நீராகாரத்தை மட்டும் உட்கொண்டு சாகும்வரை உண்ணா நோன்பிருக்கும் ஜாதிக ஹெல உறுமயவின் செயலாளரும், பாராளுமன்ற உறுப்பினருமான ஓமல்பே சோபித்ததேரர் சனாதிபதி அனுப்பிய பதிலையும், உறுதிமொழியையும் நிராகரித்துள்ளார்.

நேற்று அதிகாலை 4 மணியளவில் ரோகித போகல்லாகமவும், பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவும் சனாதிபதியின் பதிலை நேரடியாகச் சென்று மல்வத்தை மகாநாயக்க தேரரிடம் சமர்ப்பித்தனர். அதன்பின் மஹாநாயக்கரின் உத்தியோகபூர்வ (12ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### வீடு விற்பனைக்கு

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு முன்ஒழுங்கையில் உள்ள 2ஏக்கர் காணியுடன் பெரிய கல்வீடு, கிணறு, மலசல கூட வசதிகளுடன் விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- திருமதி: பூமணி-தர்மலிங்கம், 3 ஆம் வட்டாரம்,முள்ளியவளை. (6166)

### காணி விற்பனைக்குண்டு

இல 59/3 முரசுமோட்டையில் வீடு,கிணறுடன் தென்னை, மா, மற்றும் ஏனைய பயன் தரும் மரங்கள் அடங்கியகாணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்வோர் நேரில் வந்து தொடர்புகொள்ளவும். (6256)

### தவறி விட்டது

இராஜரட்ணம் விக்னேஸ்வரன் என்பவரது அடையாள அட்டை (743475216-V) மற்றும் முக்கிய ஆவணங்கள்என்பனமுறிகண்டிக்குஅருகாமையில் தவறி விட்டது. அதேஇடத்தில்இதனை எடுத்து த.129161 இலக்கமுடைய (MT-90) மோட்டார் சைக்கிளில் வந்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது. இதனை எடுத்தவர் ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்குமாறு கேட்கப்படுகிறார். (6254)

### வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவில் இயங்கும் வெதுப்பகம் ஒன்றிற்கு வெதுப்பக வேலை தெரிந்தவர்கள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். உணவு, தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்.தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி கா.விக்கினேஸ்வரன், யாழ்.சுவை வெதுப்பகம், பேருந்து நிலையம் முன்பாக, முல்லைத்தீவு. (6255)

### காணி விற்பனைக்கு

கிளிநொச்சி உதயநகர் கிழக்கு, இலக்கம் 200 இல் 1/4 ஏக்கர் காணி விற்பனைக்குண்டு. தொடர்புக்கு:- தங்கமதி நகைமாடம் திருநகர் வீதி, கிளிநொச்சி. (சி.12036)


### கலந்துரையாடல்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச முன்பள்ளி கல்வி மேம்பாட்டு நிலைய கலந்துரையாடல் இன்று காலை 9.00 மணிக்கு புதுக்குடியிருப்பு புனர்வாழ்வுகழக மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச முன்பள்ளிகளின்கல்வி மேம்பாட்டுத் தலைவி அறியத் தருகின்றார். (8)


## திறப்பு விழா அழைப்பு

## C.B கணனி கல்வி நிறுவகம்

*காலம்:-*
2005.06.12.ஞாயிற்றுக்கிழமை
பகல். 9.30மணி.

*திறப்புவிழா நிகழ்விடம்:-*
C.B. கணனி கல்விநிறுவகம்,
புகையிரதவீதி, கோண்டாவில்.

### கூட்ட நிகழ்விடம்:-

கூட்ட மண்டபம் இந்து மகாவித்தியாலயம்,
கோண்டாவில்.

*அன்புடையீர்!*

*மேற்படி திறப்பு விழா நிகழ்வுகளில் கலந்து ஆசி வழங்கிச் சிறப்பிக்குமாறு தங்களைஅன்புடன் அழைக்கின்றோம்.*

**ஆசியுரை** ஸ்ரீலஸ்ரீ சோமாஸ்கந்த தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

**வாழ்த்துச் செய்தி** பேராசிரியர் சு.மோகனதாஸ் (உபவேந்தர்.யாழ்.பல்கலைக்கழகம்)

**பிரதம விருந்தினர்கள்**

உயர்திரு சி.இளம்பரிதி (அரசியல்துறைப் பொறுப்பாளர்,யாழ்.மாவட்டம்)

உயர்திரு. ரி.இராஜரட்ணம் (பணிப்பாளர்-உயர் தொழில்நுட்ப நிறுவகம்)

மாவை சோ.சேனாதிராசா (பாராளுமன்ற உறுப்பினர்)

உயர்திரு க.தேவராஜா (பீடாதிபதி முகாமைத்துவ வணிக பீடம், யாழ்.பல்கலைக்கழகம்)

உயர்திரு.பொ.கமலநாதன் (அதிபர்.கொக்குவில் இந்துக்கல்லூரி)

**சிறப்புவிருந்தினர்கள்**

உயர் திரு.சி.சிவமகாராசா (முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்)

செல்வி பா.மார்க்கண்டு (முன்னாள் அதிபர்.யாழ்.கோண்டாவில் இந்துமகாவித்தியாலயம்)

உயர் திரு.ந.கண்ணன் (தலைவர்.சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை)

உயர்திரு. V.அருளானந்தம் (முகாமையாளர்.தேசிய சேமிப்புவங்கி சுன்னாகம்)

உயர்திரு. கோ.சி.வேலாயுதம் (முன்னாள் கல்விப் பணிப்பாளர்)

உயர்திரு.S.சிவலிங்கம் (முகாமைப்பணிப்பாளர்.STP கணனி நிறுவகம்)

உயர்திரு.*S.V.* மகேந்திரன் (உபஅதிபர்) யாழ்.கொக்குவில்இந்துக்கல்லூரி

உயர்திரு. க.மயில்வாகனம் (தலைவர்.சமூகமுன்னேற்றக் கழகங்களின் சமாசம்)

*இவ் வண்ணம் தங்கள் நல்வரவை நாடிநிற்கும்*

C.B கணனி கல்வி நிறுவகம்,புகையிரத வீதி,கோண்டாவில். T.P- 021-4590291

K.R.சுகுமார், பணிப்பாளர்.

(சி.12124)


# பிந்துனுவெவ படுகொலை வழக்கின் குற்றவாளிகள் விடுதலையைக் கண்டித்து வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகம் ஐ.நாவிடம்புகார்

சிறிலங்கா நீதித்துறையின்கீழ் தொடர்ந்து மறுக்கப்பட்டு வருவதால் இந்த நீதித்துறைக்கு மேலான வகையில் எமக்கு நீதிகிடைக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று வடக்கு கிழக்கிற்கான மனித உரிமைகள் செயலகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையகத்திற்கு வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் எம்.எக்ஸ். கருணாரட்ணம் அடிகளார் அனுப்பிய கடித விபரம்.

பிந்துனுவெவவில் சிறிலங்கா அரசால் அமைக்கப்பட்ட புனர்வாழ்வு நிலையத்தில் தமிழ்க் கைதிகள் பலர் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். இந்த நிலையம் ஏழு ஆண்டுகளாக இயங்கி வந்தது. பிந்தனுவெவ எனுமிடத்தில் சிங்கள கிராம மக்களுக்கும், நிலையங்களில் இருந்த தமிழ்க் கைதிகளுக்கும் இடையே நல்லுறவே நீடித்து வந்தது. அக்கிராம விழாக்களில் கூட தமிழ்க்கைதிகள் பங்கேற்று வந்தனர்.

இச் சூழலில் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் 25ஆம் திகதியன்று 24 மணி நேரத்தில் தூண்டி விடப்பட்ட பகைமை உணர்வு காரணமாக இக் கிராமத்தைச் சேர்ந்தவர்களுடன் இணைந்து ஒரு கும்பல் தமிழ்க் கைதிகளின் நிலையத்திற்கு தீவைத்துக் கொளுத்தியது. தமிழ்க் கைதிகள் மீது கொடூரத் தாக்குதல் நிகழ்த்தப்பட்டது. இதில் 26 பேர் படுகொலை செய்யப்பட்டனர். 14 பேர் படுகாயங்களுடன் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

இத்தாக்குதல் நடந்த போது நிலையத்தைச் சுற்றியிருந்த 60 இற்கும் மேற்பட்ட சிறிலங்கா பொலிசார் எவருமே தமிழ்க் கைதிகளைப் பாதுகாக்க வரவில்லை. இந்த படுகொலை தொடர்பாக ஒருவரையுமே அவர்கள் கைது செய்யவுமில்லை. தமிழ்மக்கள் தொடர்ந்து வலியுறுத்திய பின்னர் சிறிலங்கா சனாதிபதியால் விசாரணைக்குழு நியமிக்கப்பட்டு அக்குழு 2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

சிறிலங்கா குற்றப்புலனாய்வுத் துறையினரிடம் உரிய ஆவணங்களை இந்த ஆணைக்குழு கேட்டிருந்த போதும் ஆணைக்குழு தனது சொந்த விசாரணைகளின் படி 41 பேரை குற்றவாளிகள் என அடையாளம் காட்டியது. இதில் 19 பேர் சிறிலங்கா பொலிஸ்துறையைச் சேர்ந்தவர்கள். அவர்கள் மீது கொழும்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கு விசாரணை 2003 ஆம்ஆண்டு முடிவடைந்து தீர்ப்பளிக்கப்பட்டது. குற்றம் சாட்டப்பட்ட 41 பேரில் இரு பொலிசார் உட்பட ஐந்து பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மற்ற அனைவரும் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டனர்.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து மேல் முறையீட்டு மனுத்தாக்கல் செய்யப்பட்டது. கடந்த மே 27 ஆம் திகதியன்று இந்த வழக்கில் இறுதித் தீர்ப்பு அளிக்கப்பட்டது. மரண தண்டனை விதிக்கப்பட்ட ஐந்து குற்றவாளிகளுமே குற்றமற்றவர் எனக் கூறி நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது.

இலங்கையின் வரலாற்றில் தமிழ் மக்களுக்கு எதிரான சிறிலங்கா அரச படையினரின் வன்முறைகள் 1950 களிலிருந்தே தொடங்கிவிட்டது. ஆனால் அரச படையினரால் நிகழ்த்தப்பட்ட கொடூரத் தாக்குதல்களில் சில நிகழ்வுகளுக்கு மட்டுமே சிறிலங்கா அரசு விசாரணைக்கான உத்தரவை பிறப்பித்திருக்கிறது. இப்படியான சில நிகழ்வுகளை தங்களது பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

1977 ஆம் ஆண்டு சன்சொனி ஆணையம் தமிழ் மக்களுக்கு எதிரான வன்முறைகள் குறித்து விசாரணை நடத்தி 1980ஆம் ஆண்டு தனது அறிக்கையை அரசிடம் கையளித்தது. இந்த அறிக்கையில் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு உரிய நட்டஈட்டுத் தொகை அளிக்க பரிந்துரைத்தது நட்டஈட்டுத் தொகை குறித்து மதிப்பிட அரசால் குழு அமைக்கப்பட்டபோதும் அப்படி எதுவும் வழங்கப்படவில்லை.

1996 ஆம் ஆண்டு யாழில் கிருசாந்தி என்ற 18 வயது இளம் தமிழ் மாணவி சிங்கள இராணுவத்தினரால் கூட்டாக பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கப்பட்டார். தொடர்ந்து அவரது குடும்பத்தினரையும் இராணுவம் கொன்றது. இது தொடர்பான வழக்கில் 1998 ஆம் ஆண்டு சிங்கள இராணுவத்தின் கீழ் நிலை ஊழியர்கள் ஆறு பேருக்கு மரணதண்டனையும் ஆறு பேருக்கு ஆயுள் தண்டனையும் விதிக்கப்பட்டது.

சிறிலங்கா நீதிமன்றத்தில் படையினருக்கு எதிரான குற்ற வழங்குகளில் தண்டனை வழங்கப்பட்டது. இதில் ஒன்றுதான் இந்தப் படுகொலை வழக்கில் உரிய விசாரணைகள் நடத்துமாறு உள்ளூர் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கடுமையான அழுத்தங்களைக் கொடுத்தது. இதனால் தான் தமிழ்ப் பெண்களின் மீது இராணுவத்தினரின் கூட்டு வல்லுறவு வழங்குகள் இருந்த போதும் இந்த வழக்கில் உரிய தீர்ப்பு அளிக்கப்பட்டது.

1996ஆம் ஆண்டு சில மாதங்களிலேயே நூற்றுக்கணக்கான தமிழர்கள் காணாமல் போயினர். இது தொடர்பாக 1990-1998 ஆம் ஆண்டுப் பகுதியில் காணாமல் போனோர் தொடர்பான சனா திபதி விசாரணைக் குழு நியமிக் கப்பட்டது.

இக் குழு 2003 ஆம் ஆண்டு தனது அறிக்கையை அரசிடம் கையளித்தது. யாழ்ப்பாணத்தின் மண்டைதீவு பகுதியில் பெருமளவானோர் காணாமல் போனது குறித்து இந்த ஆணைக் குழு எந்த விசாரணையும் மேற்கொள்ளவில்லை.அத்துடன் இந்த ஆணைக்குழுவின் அறிக்கை கையளிக்கப்பட்ட பிறகு எதுவிதமான உரிய நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவும் இல்லை.

காணாமல் போன தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்ட செம்மணி புதைகுழி விவகாரமும் வெளிச்சத்துக்கு வந்தது.சர்வதேச சமூகத்தின் பாரிய அழுத்ததினால் சர்வதேச பிரதிநிதிகள் முன்னிலையில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

இது தொடர்பான வழக்கில் 2000 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நான்கு அரச படையினர் மற்றும் பொலிஸ் துறையைச் சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டனர். இவர்கள் அனைவரும் 2000ஆம் ஆண்டு ஜூன் மாதமே பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்த வழக்கு விசாரணை இன்னும் கடந்த ஐந்து ஆண்டுகாளக நடைபெற்றுவருகிறது.

மேலே நாம் சுட்டிக்காட்டி யுள்ளதன் போக்கிலேதான் சிறிலங்கா நீதித்துறையும், அரசும் இயங்கி வருகின்றன. எவ்வளவு பாரிய அழுத்தங்கள் கொடுத்து விசாரணைகள் நடைபெற்றாலும் அதை ஒவ்வொரு நிலையிலும் முடக்குவதிலேயே சிறிலங்கா தரப்பு அக்கறை கொள்கிறது.

எனவே தமிழ் மக்களுக்கான உரிய நீதி கிடைக்க சிறிலங்காவின் இத்தகைய நீதித்துறைக்கு மேலான வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான ஆணையமும், சர்வதேச மனித உரிமைகள் சமூகமும் நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும் என்று எமது வடக்கு கிழக்கிற்கான மனித உரிமைகள் செயலகம் வேண்டுகோள் விடுக்கிறது. என்று அவர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு மன்னாரில் பயிற்சிப்பட்டறை

(மன்னார்)

மன்னார் கல்வி வலயத்திற்குட்பட்ட சகல முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சிப்பட்டறை நேற்றுமுன்தினம் மன்னார் கல்வி வலயக் கேட்போர் கூட்டத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு மன்னார் கல்வி வலயத்தின் முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் எல். ஆர் குரூஸ் தலைமை தாங்கினார். மன்னார் மாவட்ட கல்விக்கழக இணைப்பாளர் இராசையாஉட்படமுப்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள்இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.(18)

## சித்திரை-ஆனிமாதங்களுக்கான "புலரி" வெளிவந்துள்ளது

"புலரி" சித்திரை-ஆனி மாதங்களுக்கான கலைஇலக்கிய- சமூக ஏடு வெளிவந்துள்ளது. தமிழைப்பொறுத்தவரை அதன் நாகரிகத்தின் அடித்தளம் பலமாகவும், தெளிவாகவும் உள்ளது" என்ற தலைப்பில் அமைந்த பேராசிரியர் பேர்னாட் பேருடனான நேர்காணலும்" முள்ளும் வாசமுமாய் என்றதலைப்பிலமைந்த கவிநேசன் எழுதிய கவிதையும் "ஈடுபாடு"என்ற தலைப்பிலமைந்த சோ.பத்மநாதன் எழுதிய கவிதை உட்பட பல ஆக்கங்களைத் தாங்கி இவ் ஏடுளவெளிவந்துள்ளது.




### அளம்பில் புனித அந்தோனியார் ஆலய திருவிழா

*12. 06. 2005– மாலை 6. 00 மணிக்கு நற்கருணை வழிபாடு*
*13. 06. 2005– காலை7. 00 மணிக்கு –திருநாள் திருப்பலி*
*புனிதரின் அருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*
*–பங்குமக்களும்,பங்குத்தந்தையும்.*

பேருந்து விசேட சேவை

**12.06.2005**
மாலை 3.30–வலைஞர்மடம், இரணைப்பாலை, புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஊடாக அளம்பில்.
மாலை 4.00 மணி புதுக்குடியிருப்பு, முள்ளியவளை,குமுழமுனை ஊடாக அளம்பில்.
மாலை 5.30 முல்லைத்தீவு (வட்டுவாகல்), அளம்பில்.

**13.06.2005**
காலை 6.00 மணி புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ஊடாக அளம்பில்.
காலை 6.30 முல்லைத்தீவு அளம்பில். (6169)

# சர்ச்சைக்குரிய குவான்டனமோ சிறையை மூடிவிட அமெரிக்க சனாதிபதி பரிசீலனை



தீவிரவாதிகளை வேரோடழிப்பதான 'மின்னல்' இராணுவ நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமெரிக்க டாங்கி பாக்தாத்தின் அயற் பிரதேசத்தில் ரோந்தில் ஈடுபடுகின்றது.


(வோஷிங்டன்)

**கியூபாவில் உள்ள 'குவான்டனமோ' சிறைச்சாலையை மூடுவது குறித்து ஆராயப்படும் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தெரிவித்துள்ளார்.**

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி ஏராளமான தலிபான்களையும் அல்-ஹைய்தா தீவிரவாதிகளையும் கியூபா அருகே உள்ள குவான்டனமோ சிறையில் அடைத்துவைத்துள்ளது. தற்போது இந்தச் சிறையில் 40 நாடுகளைச் சேர்ந்த 540 கைதிகள் உள்ளனர்.

இந்தச் சிறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அமெரிக்க படையினர் குரான் புத்தகத்தை கழிப்பறையில் வீசி எறிந்ததாக சமீபத்தில் குற்றம்சாட்டப்பட்டது. இந்தச் செய்தி முஸ்லிம்களின் உணர்வை புண்படுத்துவதாக அமைந்ததுடன் போராட்டமும் நடைபெற்றது.

இந்த நிலையில் குவான்டனமோ சிறையில் பல்வேறு முறை கேடுகள் நடப்பதால் அந்த சிறையை மூடி விடலாம் என அமெரிக்க முன்னாள் அதிபர் ஜிம்மி கார்டர் மற்றும் தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்த பலர் கருத்துத் தெரிவித்திருந்தனர்.



"இது குறித்து அமெரிக்க அதிபர் புஷ் பாக்ஸ் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் குறிப்பிடுகையில்; அமெரிக்காவுக்கு ஆபத்தை விளைவிக்க முயன்ற தீவிரவாதிகள் தான் குவான்டமோ சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். ஜெனீவா உடன்படிக்கையிலேயே இங்குள்ள கைதிகள் நடத்தப்படுகின்றனர். அமெரிக்காவின் பாதுகாப்பு, சிறையை மூடுவதால் ஏற்படும் விளைவுகள் ஆகியவை குறித்து ஆராய்ந்த பின் குவான்டனமோ சிறையை மூடுவதா? வேண்டாமா என்பது குறித்து முடிவு செய்யப்படும்" என்றார்

## அல்-ஹைதாவின் அதிகரித்த தாக்குதல்? முஸ்லிம்களை காப்பாற்ற புதிய சட்டம்!

(லண்டன்)

மதத்துவேஷம் காரணமாக முஸ்லிம்கள் தாக்கப்படுவதை தடுப்பதற்காக புதிய சட்டம் ஒன்று இங்கிலாந்து பாராளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அல்-ஹைதா தாக்குதல் நடத்தி ஆயிரக் கணக்கான அப்பாவிகளை கொன்று குவித்ததாகவும். இதைத் தொடர்ந்து அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் வசிப்பவர்கள் மதத்துவேஷம் கொண்டு முஸ்லிம்கள் மீது தாக்கு தல் நடத்தும் சம்பவங்கள் நடந்து வருகின்றன.

இதைத்தடுப்பதற்காக மத விரோதம் மற்றும் துவேஷத்தைத் தூண்டி விடுவதைத் தடை செய்யும் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தில், இஸ்லாமிய மதபோதகர்கள் தங்கள் ஆதரவாளர்களை வன்முறையில் ஈடுபடும்படி தூண்டு வதைத் தடை செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளன.

இந்தச் சட்டம் கடந்த ஆண்டே கொண்டு வரப்பட்டது. ஆனால் அதை சட்டமாக அமுலாக்க அரசு தவறிவிட்டது. அதனால் அது இப்போது மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது. இங்கிலாந்து நாட்டு முஸ்லிம் சபையின் பொதுச் செயலாளர் இக்பால் சக்ரைனீ இந்தச் சட்டத்தை வரவேற்றிருக்கிறார்.

ஆனால் இதன் எதிர்ப்பாளர்கள் பேச்சு உரிமையைப் பாதிப்ப தாவும், மதப்பிரச்சினைகள் பற்றி விவாதிப்பதை அது தடை செய்வதாகவும் விமர்சித்துள்ளார்.



வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இசைக்கச்சேரியில் இசைக்குழுவினருடன் அமெரிக்க அதிபர் புஷ்

## ஜப்பானில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானின் மத்திய பகுதியில் வியாழக்கிழமை மதியம் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுமானியில் 4.6 புள்ளியாக அது பதிவானது. டோக்கியோ நகருக்கு 50 கி.மீ கிழக்கில் உள்ள சிபா என்ற இடத்தில் தரைக்கு அடியில் 80 கி.மீ ஆழத்தில் அது மையம் கொண்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## காபூலில் தீவிரவாதிகளால் கடத்தப்பட்ட இத்தாலியப் பெண் அதிகாரி விடுதலை

( காபூல்)



காபூல் நகரில் கடத்திச் செல்லப்பட்ட இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெண் அதிகாரி கிளிமென்டினா கன்டோனி தீவிர வாதிகளால் விடுதலை செய்யப் பட்டுள்ளார்.

கடத்தப்பட்ட பெண் அதிகாரியின் கதி என்ன? தீவிரவாதிகளின் கோரிக்கை என்ன என்பதும் மர்மமாக இருந்து வந்த நிலையில் தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த இத்தாலி நாட்டு அதிகாரிகளும் ஆப்கானிஸ்தான் சென்றனர். ஆனால் பேச்சுவார்த்தை நடத்த தீவிரவாதிகள் முன்வரவில்லை.

இந்த நிலையில்கடத்தப்பட்ட பெண்அதிகாரியை விடுதலை செய்யக்கோரி பத்தாயிரத்துக்கும்மேற்பட்ட விதவைப்பெண்கள், குழந்தைகள் காபூல் நகரில் பேரணி நடத்தினார்கள்.

ஆயிரக்கணக்கான பெண்களும், குழந்தைகளும் அந்தப்பெண் அதிகாரியை விடுதலை செய்யக்கோரும் உருக்கமான வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகளை நகர் முழுவதும் ஒட்டினார்கள்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் இந்தக் கோரிக்கையை ஏற்று தீவிரவாதிகள் கடத்தப்பட்ட பெண் அதிகாரியை விடுதலை செய்துள்ளனர்.

## ஜம்மு காஷ்மீர் விடுதலைக்காகப் போராடும் இரு அமைப்புக்கள் ஒன்றிணைய இணக்கம்

(லண்டன்)

அமானுல்லா கான், யாசின் மாலிக் ஆகியோர் தலைமையில் இப்போது தனித்தனியாக இயங்கிவரும் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணி (ஜே.கே.எல்.எப்)குழுக்கள் ஒன்றாக இணைவது என்று முடிவு செய்துள்ளன.

இதை அமானுல்லாகான் தலைமையிலான பிரிவின் லண்டன் செய்தித் தொடர்பாளர் சஃபர்கான் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பில் உள்ள முசாபராபாத்தில் இருக்கும் அமானுல்லா கானை, யாசின் கான் புதன்கிழமை இரவு சந்தித்தபோது இந்த முடிவு எடுக்கப்பட்டதாக சஃபர்கான் தெரிவித்துள்ளார்

காஷ்மீரை மத அடிப்படையிலோ, அல்லது புவியியல் அடிப் படையிலோ பிரிப்பதையோ சேர்ப்பதையோ தாங்கள் எதிர்ப் பதாக அவர் குறிப்பிட்டார். காஷ்மீர் பிரச்சினைக்கான தீர்வு என்பது அனைத்துத் தரப்பினரின் நலன்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.



கடந்த மாதம் இடம் பெற்ற எதியோப்பிய தேர்தல் முடிவுகளுக்கு எதிராக நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் 20 பேருக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உடல்களை வைத்திருக்கும் வைத்தியசாலை சவச்சாலைக்கு வெளியே உறவினர் ஒருவர்.



எதியோப்பியாவில் ஆர்ப்பாட்டத்தின் போது கொல்லப்பட்டவர்களின் மரணச் சடங்கில் பெண்களும் உறவினர்களும் அழுது கொண்டிருகின்றனர்.

## இந்தோனேஷியாவில் மீண்டும் சுனாமி அபாயம் இங்கிலாந்து விஞ்ஞானிகள் எச்சரிக்கை

கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி இந்தோனேஷியாவின் சுமத்திராத்தீவுப் பகுதியில் கடலுக்கு அடியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி பேரலைகள் எழுந்தன. இதனால் இந்தோனேஷியா, இந்திய, இலங்கை உட்பட பல்வேறு நாடுகளில் மூன்று லட்சம் பேர் வரையில் பலியானார்கள்.

கடந்த மார்ச் 28 ஆம் திகதி மீண்டும் நிலநடுக்கம் ஏற்பட்டது. இதில் சுனாமி அலைகள் ஏற்படவில்லை என்றாலும் நில நடுக்கத்தில் ஆயிரக்கணக்கான வீடுகள் இடிந்து தரை மட்டமானது.

இந்த நிலையில் இந்தோனேஷியாவில் மூன்றாவது முறையாக நிலநடுக்கம் ஏற்படும் என்று இங்கிலாந்து விஞ்ஞானி ஒருவர் கூறியிருக்கிறார். ஜான் மெக்குளாங்கி என்ற அந்த விஞ்ஞானி ஏற்கனவேஇந்தோனேஷியாவில் இரண்டாவது முறையாக நில நடுக்கம் ஏற்படும் என்று கணித்துக் கூறியிருந்தார். அதன்படி மார்ச் மாதம் அங்கு நிலைநடுக்கம் ஏற்பட்டது.

மூன்றாவது முறையாக மீண்டும் நிலநடுக்கம் ஏற்படும் போது சுனாமி பேரலைகள் உருவாகும் என்று அவர் எச்சரித்திருக்கிறார். இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 8.5 புள்ளியாக இருக்கலாம் என்றும் அவர்கூறியிருக்கிறார்.

இந்த நிலநடுக்கத்தால் உருவாகும் சுனாமி பேரலை கள் அவுஸ்திரேலியாவின் பெர்த் நகரம்வரை தாக்கும்.இந்த நில நடுக்கம் இன்னும் ஒரு சில மாதங்களிலும் ஏற்படலாம், பல ஆண்டுகளுக்கு பின்பும் ஏற்படலாம். பாட்டுஅல்லது மென்டாவல் தீவுப் பகுதியில் இது உருவாக வாய்ப்புள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

## போதைப் பொருள் விற்பனை அமெரிக்காவில் 45 இந்தியர் கைது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் ஜோர்ஜியா மாகாணத்தில் தடை செய்யப்பட்ட போதை மருந்தை கடைகளில் வைத்து விற்றதாக 45 இந்திய வம்சாவழி வியாபாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதைப் பொருட்களைத் தயாரிக்க பயன்படும் மருந்து என்று தெரிந்தே அதை விற்றதாக 45 பேர் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இலாபம் ஒன்றே குறி என்று நினைத்து சமூகத்தைச் சீரழிக்க இந்த வியாபாரிகள் துணிந்து விட்டார்கள் என்று அவர்கள் மீது அரசு தரப்பு வக்கீல் குற்றஞ்சாட்டியுள்ளார்.

# வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலைய மக்கள்

# வவுனியா மனித உரிமைகள்அமைப்பில் முறைப்பாடு

(செட்டிகுளம்)

**வவுனியா பூந்தோட்ட நலன்புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்கள் தமக்குரிய அடிப்படைத் தேவைகள் உரிய முறையில் செய்துதரப்பட வில்லை என்று வவுனியா மனிதஉரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்கள்.**

இதுதொடர்பாக வவுனியா மனித உரிமைகள் ஆணைக்குழு வின் பிரதிநிதிகள் சென்று ஆய்வு செய்துள்ளதுடன் அந்த மக்களுக்கு தேவையான அடிப்படை தேவைக ளினை செய்துகொடுக்குமாறு அரச அதிபருக்கு அறிவிக்க இருப்பதாக மனித உரிமைகளின் ஆணைக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

மின்சாரம், நீர் உரிய நேரத்தில் நிவாரணப் பொருட்கள் போன்றவற் றினை செய்து கொடுக்குமாறு கோரவுள்ளனர்.

வவுனியா பூந்தோட்ட நலன் புரி நிலையத்தில் வாழ்ந்து வரும் மக்களுக்கு குடிநீர் பெரும் பிரச்சி னையாக இருப்பதாக அந்த மக்கள் தெரிவித்துள்ளனர். போதிய அளவு நீர் நலன்புரி நிலையத்தில் இல்லை என்றும் நீர்த் தாங்கிகளால் வழங்கப் படுகின்ற நீர் போதிய அளவாக இல்லை என்றும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

தற்போது வவுனியாவில் வரட்சி நிலவி வருவதாகவும் அந்த மக்களுக்கு தேவையான நீர் வெளியிடத்தில் இருந்து எடுத்துச் சென்று விநியோகிக்கப்பட்டு வரு வதாகவும் வவுனியா அரச செயல கம் தெரிவிக்கின்றது. (21)

## பற்றைகளால் சூழப்பட்ட நிலையில் ஆரம்ப சுகாதார நிலையம்

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு உதவி அர சாங்க அதிபர் பிரிவில் உள்ள ஒரு ஆரம்ப சுகாதார நிலையம் இவ்வாறுள்ளமை குறித்து மக்கள் கவலையடைந்துள்ளனர்.




ஆரம்ப சுகாதார நிலையக்காணி துப்பரவு செய்யப்படாது பற்றை கள் நிறைந்து காணப்படுகின்றது. இதனால் அங்கு செல்கின்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

மேலும் இவ் ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு செல்லும் வீதியின் குறுக்கே நீர் ஓடுவதற்கு வடிகால் வெட்டியுள்ள போதும் இதற்கு ஏற்ற பாலம் ஏதும் இதுவரையும் அமைக்கப்படவில்லை. (08)

## கண்டெடுப்பு

(கிளிநொச்சி)

சண்முகநாதர்-இரத்தினசிங்கம் பல்லவராயன்கட்டு ஜெயபுரம் (753064613V)என்பவரின் தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கப்பட்டுள் ளது உரியவர் ஆதாரம்காட்டிப் பெற் றுக் கொள்ளவும். (15)

## வருடாந்த மகோற்சவம்

வட்டக்கச்சி ஆறுமுகம் வீதியில் கோயில் கொண்டுள்ள முருகப் பெரு மானார் கோவில் வருடாந்த மகோற் சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 9 ஆம் திருவிழா தேர்த்திருவிழாவும் அடங்கலாக 10 நாட்கள் மகோற்சவம் நடைபெறும். (12)

## பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வுக் கழகத்தால் "அன்புமனை" திறந்து வைப்பு

(அலுவலக செய்தியாளர்)

பெண்கள் அபிவிருத்தி புனர் வாழ்வு நிறுவனம், யுனிசெவ் நிறு வனத்தின் நிதியுதவியுடன் கிளி நொச்சி மாவட்டத்தில் "அன்புமனை" என்ற பெயரில் சமூகத்தில் பாதிப் புக்குள்ளாகி ஆதரவு தேடி வரு கின்ற பெண்கள் சிறுவர்களை அர வணைத்து பாதுகாத்து அவர்களை மீண்டும் சமூகத்தில் இணைத்து விடுகின்ற புதிய வேலைத் திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது.





நேற்று முன்தினம் மாலை 3.00 மணியளவில் பெ.அ.பு.நி.நிறை வேற்றுப் பணிப்பாளர் திருமதி.சுதர் சினி செல்வக்குமார் தலைமையில் யாழ்.சாலை கிளிநொச்சியில் அமைந்துள்ள "அன்புமனை" யின் பெயர்ப்பலகையினை யுனிசெவ் பிரதிநிதி பெனிபுறு அவர்கள் திரை நீக்கம் செய்து வைத்து புதிதாக இணைந்த பயனாளிகளை பார்வை யிட்டு அவர்களின் எதிர்காலம் தொடர்பாகவும் உரையாடினார். (கு)

## வட தமிழீழ ஐந்து மாவட்டங்களின் அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

(கிளிநெச்சி)

வடதமிழீழத்தின் ஐந்து மாவட் டங்களில் அபிவிருத்தி வேலை



களை முன்னெடுத்து செல்வது தொடர்பான ஒன்று கூடல் ஒன்று நேற்று முன்தினம் வியாழக்கி ழமை காலை 10 மணிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவ னத்தின் நடுவப்பணியக கேட்போர் கூடத்தில் நிறுவனத்தின் துணைப் பொறுப்பாளர் தலைமையில் இடம் பெற்றுள்ளது.

இந்நிகழ்வின் சிறப்புரையினை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன பொறுப்பாளர் சி.கரிகாலன் நிகழ்த்தினார். தொடர்ந்து முல்லைத் தீவு, வவுனியா, மன்னார், கிளி நொச்சி, யாழ்ப்பாண மாவட்டங்க ளின் கமநலஅபிவிருத்தித் திணைக் கள உதவி ஆணையாளர்கள் கருத்துரைகளை வழங்கினர்.

எதிர்வரும் காலங்களில் மேற் கொள்ள வேண்டிய வேலைத்திட் டங்கள் தொடர்பான பொது முடிவு கள் இவ் ஒன்று கூட லில் எடுக்கப் பட்டன.

மேற்படி ஒன்று கூடலில் கமநல அபிவிருத்தி திணைக்களங்களின் உதவி ஆணையாளர்கள் பெரும் பாக உத்தியோகத்தர்கள், பொருண் மிய மேம்பாட்டு நிறுவன மாவடடப் பொறுப்பாளர்கள், மாவட்ட இணைப்பாளர்கள், மாவட்ட உட் கட்டுமான முகாமையாளர்கள், இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (15)

-உலக நாடக தினத்தை முன்னிட்டு-

## மாகாணக் கல்வியமைச்சினால் நகைச்சுவை நாடகப் போட்டி

(திருகோணமலை)

உலக நாடக தினத்தை முன் னிட்டு வடக்கு கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் பண்பாட்டலு வல்கள் திணைக்களம் நகைச் சுவை நாடகப் போட்டியையும் அது தொடர்பான நாடக விழாவையும் எதிர்வரும் ஜூலை மாதம் நடுப் பகுதியில் நடத்துவதற்கு தீர்மானித் துள்ளது என்று மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.தியாக லிங்கம்அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப் பட்ட அறிவிப்பில் தெரிவிக்கப்பட் டிருப்பதாவது;

வடக்கு கிழக்கு மாகாணத்தில் உள்ள கலை மற்றும் இலக்கிய மன்றங்களுக்கு இடையே நகைச் சுவை நாடகப்போட்டி இடம் பெறும்.

நாடகப் பிரதிகள் 45 நிமிடங் களுக்குள் மேடையேற்றக் கூடிய தாக இருத்தல் வேண்டும்.

தனிப்பட்ட நபர்களை, அரசி யல் கட்சி சார்ந்த விடயங்களைத் தாக்குவதாகவோ விமர்சிப்பதா கவோ நாடகங்கள் அமைந்திருத் தல் கூடாது.

உள நெருக்கடியால் பாதிக்கப் பட்டு இறுகிப் போயிருக்கும் மனங் களை விடுவிக்கும் பொருட்டாக நாடகங்கள் அமைந்திருந்தல் நன்று.

நாடகப் பிரதிகள் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் எமக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

பரிசுக்குரியதாக தெரிவு செய் யப்படும் முதல் மூன்று நாடகங்க ளுக்கும் பணப்பரிசுகளும் சான்றி தழ்களும் வழங்கப்படும்.

உதவிப் பணிப்பாளர், பண்பாட் டலுவல்கள் திணைக்களம், கல்வி அமைச்சு, வடக்கு கிழக்கு மாகா ணம், திருகோணமலை என்ற விலாசத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக் கப்பட்டுள்ளது.

## மணலாறில் நிலைகொள்ள இராணுவத்திற்கு புதிய கட்டடங்கள்

மணலாறில் நிலைகொள்ள புதிய பாரிய கட்டடங்களை சிறிலங்கா இராணுவம் உருவாக்கியிருக்கிறது. மணலாறில் சிறிலங்கா இராணுவம் அமைத்துள்ள புதிய கட்டடத்தை சிறிலங்கா இராணுவத் தளபதி சாந்த கொட்டேகொட அண்மையில் திறந்து வைத்துள்ளார்.

பௌத்த பிக்குகளின் மதச்சடங்குகளுடன் இந்த தொடக்க விழா நடைபெற்றது. இராணுவத்தினருக்கான குடியிருப்புக்களை உள்ளடக் கியதாக இந்தக் கட்டடங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்ச்சியில் இராணுவ அதிகாரிகள் மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி ...க, பிரிகேடியர் சூரியாராச்சி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## வவுனியா மாவட்ட தாண்டிக்குள புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(கிளிநொச்சி)

2005 ஆம்ஆண்டுக்கான 10000 குள வேலைத்திட்டங்களின் கீழ் வவுனியாமாவட்டத்தின் தெரிவு செய்யப்பட்ட குளங்களின் முதலா வது குளமாக கோவில்குளம் கம நல கேந்திர நிலையத்திற்கு உட் பட்ட தாண்டிக்குளத்தின் புனர மைப்பு வேலைகளை கடந்த புதன் கிழமை காலை 10 மணிக்கு கமநல உதவிஆணையாளர் தெய் வேந் திரம், த.பொ.மே நிறுவன வவு னியா மாவட்ட பொறுப்பாளர் செ.ராகுலன் ஆகியோர் இணைந்து ஆரம்பித்து வைத்தனர். இந்நிகழ் வில் பெரும்பாக உத்தியோகத்தர் கள் கிராம சேவையாளர்கள், கமக் கார அமைப்புப் பிரதிநிதிகள், விவ சாயிகள் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இதேவேளை தெரிவு செய்யப் பட்ட ஏனைய குள புனரமைப்பு வேலைத்திட்டங்களும் மிக விரை வில் ஆரம்பிக்கப்படவுள்ளன. (15)

## கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லை அதிகரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு, வட் டக்கச்சி, இராமநாதபுரம் பகுதிக ளில் கட்டாக்காலி கால்நடைகளின் தொல்லை வெகுவாக அதிகரித் துள்ளது.

பெருமளவில் விவசாய நடவ டிக்கைகளை மேற்கொண்டுவரும் இப்பிரதேச மக்கள் கட்டாக்காலி கால் நடைகளின் தொல்லையால் தொடர்ந்தும் பயிரழிவுகளை சந் தித்து வருகின்றனர்.

எனவே இது விடயத்தில் சம் பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென பொது மக்கள் கேட் டுக் கொள்கின்றனர். (15)

### -சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு -

# சுகாதார சேவைகளை வழங்க சிறிலங்கா அரசாங்கம் தவறிவிட்டது!

### –உலக சுகாதார ஸ்தாபன பிரதிநிதிகளிடம் அ.சா. அ.இ. தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

**"சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடா நாட்டின் கரையோரப் பகுதிகளில் உரிய சுகாதார சேவைகளை வழங்குவதிலிருந்து சிறிலங்கா அரசு தவறிவிட்டதாக " யாழ். மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணையப்பிரதிநிதிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.**

யாழ். குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்துள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகர்களுடனான சந்திப்பின் போதே மேற்கொண்ட குற்றச்சாட்டை அவர்கள் முன்வைத்தனர்.

யாழ். குடாநாட்டிற்கான விஜயத்தை மேற்கொண்டு வருகைதந்துள்ள உலக சுகாதார நிலைய ஆலோசகர்கள் யாழ் மாவட்ட அரச சார்பற்ற அமைப்புக்களின் இணைய பிரதி நிதிகளை சந்தித்துப்பேச்சுக்களை நடாத்தினர்.

நல்லூர் கோவில் வீதியிலுள்ள அரசசார்பற்ற அமைப்புக்களின் இணைய அலுவலகத்தில் இடம்பெற்ற இச்சந்திப்பில் இணையத்தின் தலைவர் ச.விக்கினேஸ்வரன் தலைமை தாங்கினார். இடம் பெயர்ந்தோர் நலன் புரி அமைப்பைச் சேர்ந்த சு. பரமநாதன், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தைச் சேர்ந்த பிரதிநிதிகளென பலரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட கரையோர கிராமங்களில் சுகாதார வசதிகளை ஏற்படுத்தி வழங்கும் விடயத்தில் இலங்கை அரசு தொடர்ந்தும் அக்கறையின்றி இருக்கிறது.பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடிப்படை சுகாதார வசதிகள்கூட ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூட மீளத் திறக்கப்படவில்லை.

குடாநாட்டில் ஒரேயொரு புற்றுநோய்ச்சிகிச்சை நிலையம் தெல்லிப்பழையிலேயே உள்ளது. அதியுயர் பாதுகாப்பு வலயமென கூறி அரச படைகளினது கெடுபிடிகள் ஒரு புறம் தொடர்கிறது.

மறுபுறத்தே மார்புப்புற்று நோய்க்கான அடிப்படைச் சிகிச்சை கருவிகள் கூட இன்றி பெயரளவிலேயே அவ்வைத்தியசாலை இருக்கிறது.

குடாநாட்டு மக்களது தேவைகளை நிறைவு செய்ய உள்ள ஒரேயொரு போதனா வைத்திய சாலையான யாழ். போதனா வைத்தியசாலை கூட அடிப்படைத் தேவைகள் பல நிறைவு செய்யப்படாத நிலையிலேயே இருக்கிறது.

அரசு இவ்விடயத்தில் கூட அக்கறையற்றதாகவே இருக்கின்ற தெனவும் இச்சந்திப்பில் எடுத்து கூறப்பட்டுள்ளது. (27)

## சங்கம நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு இன்று இடம்பெறவுள்ளது.

முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் இச்சங்கம நிகழ்வு நடைபெறவுள்ளது. மாறிவரும் அரசியல் இராணுவச் சூழ்நிலைகள் தொடாபாக இச்சங்கம நிகழ்வில் விரிவாக ஆராயப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (28)

## விசமிகளினால் கல்வீச்சு தாக்குதல்; அரசியல் துறையினர் விசாரணை

(தென்மராட்சி)

கொடிகாமம் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவைச் செயலர் வீட்டின் மீது விசமிகள் சிலரால் கல் வீசித்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அத்துடன் மிரட்டல் விடுக்கும் வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரம் ஒன்றும் இவ்விசமிகளால் வீட்டின்மதில் சுவர் மீதுஒட்டப் பட்டுள்ளது.

இது குறித்து கொடிகாமம் பிரதேச அரசியல் துறையினர் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (28)

## சிறிலங்கா பொலிசாரின் அனுசரணையுடன் மட்டுவில் சந்திரபுரத்தில் கசிப்பு விற்பனை

(தென்மராட்சி)

மட்டுவில் மத்தி சந்திரபுரத்தில் சட்டவிரோத கசிப்பு விற்பனை நடைபெற்று வருவதாக இக்கிராம மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

சிறிலங்காப் பொலிசாரின் அனுசரணையுடனையே இக்கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருகின்றது. பகல் நேரங்களிலும் எந்தவித கட்டுப்பாடுகளுமின்றி இங்கு கசிப்பு விற்பனை இடம்பெற்றுவருகின்றது.

சம்பந்தப்பட்டோர் இவ்விடயத்தில் கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பிரதேச நலன்விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(28)

## துர்நடத்தையில் ஈடுபட்ட இளைஞர்கள் கலாச்சாரம் பேணும் குழுவிடம் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

நாவாந்துறை முஸ்லிம் மையவாடி பகுதியில் இளம்பெண் ஒருவருடன் தகாத உறவில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர்கள் கலாச்சாரம் பேணும் குழு வினரால் மடக்கிப்பிடிக்கப்பட்டனர்.

இப்பகுதி மக்கள் கொடுத்த அவசர தகவலையடுத்து யாழ். பிரதேச கலாச்சாரம் பேணும் குழுவினர் சம்பவ இடத்திற்குச் சென்று கலாச்சார சீரழிவில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இளைஞர்களை மடக்கிப்பிடித்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட இளைஞர்கள் கடுமையான விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவ்வாறான சமூக கட்டமைப்புக்களை சீரழிப்போருக்கு எதிராகக் கடும் நடவடிக்கையைத் தாம் எடுக்கவுள்ளதாக கலாச்சாரம் பேணும் குழுவினர் தெரிவித்துள்ளனர். (28)

### -பாடசாலை ஆரம்பிக்கப்படாததைக் கண்டித்து

## கல்வி வலய முற்றுகைப் போராட்டத்திற்கு மருதங்குளம் பகுதி மக்கள் முஸ்தீபு

(தென்மராட்சி)

எழுதுமட்டுவாள் வடக்கு மருதங்குளம் தமிழ் கலவன் பாடசாலையை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படாத பட்சத்தில் தென்மராட்சி கல்வி வலயம் முன்பாக முற்றுகைப் போராட்டம் நடத்தப்படுமென அப்பகுதிப் பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

இராணுவத்தினரின் பிடியில் இருந்து பொதுமக்களின் பாரிய போராட்டங்களின் மத்தியிலேயே இப்பாடசாலை விடுவிக்கப்பட்டது.

ஆயினும் இதனை மீள இயங்க வைக்க சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இந்த நடவடிக்கையினைக் கண்டித்தே இப்பகுதிப் பொதுமக்கள் கல்வி வலய முற்றுகை போராட்டத்தை நடத்த தீமானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (28)

## கொடிகாமம்–நாவற்காடு பகுதியில் மருமகனால் மாமனார் குத்திக்கொலை

(தென்மராட்சி)

கொடிகாமம் நாவற்காடு பகுதியில் மருமகனால் மாமனார் குத்திக்கொலை செய்யப்பட்டுள்ளதுடன் தனது மனைவியையும் கத்தியால் குத்தி படுகாயப் படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நாவற்காட்டைச்சேர்ந்த நீலபிள்ளை (வயது-64) என்பவரே இச்சம்பவத்தில் கொலை செய்யப்பட்டுள்ளவராவார்.

சம்பந்தப்பட்ட நபர் தற்போது தலைமறைவாகியுள்ளார். இச்சம்பவம் குறித்து கொடிகாமம் பொலிசார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன் சம்பந்தப்பட்ட நபரைத் தேடிவருகின்றனர். (28)

## கணினிகள் அன்பளிப்பு

(தென்மராட்சி)

கைதடி கலைவாணி வித்தியாலயத்திற்கு புலம் பெயர்ந்து வாழும் இப்பிரதேச மக்களால் கணினி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாலய மாணவர்களின் கல்வியை மேம்படுத்தும் நோக்குடன் இக்கணினி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் அவர்களாலும் கணினி ஒன்று இப்பாடசாலைக்கு வழங்கப்பட்டிருப்பதாக இப்பாடசாலையின் அபிவிருத்திக் குழு தெரிவித்துள்ளது. (28)

# வலிகாமம் வடக்கில் திட்டமிட்ட முறையில் படையினரால் விவசாய நிலங்கள் அழிப்பு

### –பாரிய ஆபத்து உருவாக்கப்படுகின்றது

(நல்லூர்)

யாழ்ப்பாணத்தின் வட பகுதியில் அமைந்துள்ள காங்கேசன்துறைப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் திட்டமிட்ட முறையில் இப் பகுதியிலுள்ள வளத்தை அழிக்கும் நடவடிக்கையில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தவகையில் அண்மைக்காலத்தில் பலாலி விமானத்தளத்தின் ஓடுபாதையை அமைப்பதற்கெனப் பாரிய இயந்திரங்களைப் பயன்படுத்தி நிலத்தின் கீழ் இருந்து பாரிய அளவில் கற்களை எடுத்துச்செல்லும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

ஏற்கனவே இப்பகுதியிலுள்ள விவசாய நிலங்கள், கடல் வளம் என்பனவும் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டு பயன்படுத்தப்படாத நிலையில் அழிந்து வருகின்றன.

தற்போது விமான ஓடுபாதைக்கென நிலத்தில் இருந்து கற்களை எடுப்பதன் மூலம் கடல் நீர் நிலப்பரப்புக்குள் வரக்கூடிய அபாயமும் எழுந்துள்ளதுடன், குடிநீர்க் கிணறுகளும் உவர் நீராக மாறுகின்ற நிலைமையும் ஏற்பட்டுள்ளது. யாழ். குடாநாட்டில் தரைக்கீழ் நீர் கடல் நீர் உட்புகும் நிலைமை காரணமாகப் பழுதடையும் அபாயம் எதிர்நோக்கப்படுவதாக அறிக்கைகள், ஆய்வுகள் கூறுகின்ற வேளையில் இராணுவத்தினரின் இத்தகைய செயற்பாடுகள் பொதுமக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

யாழ். குடா நாட்டு மக்கள் தமது நீர்த்தேவைக்கு முற்றுமுழுதாக. தரைக் கீழ் நீரை நம்பியே செயற்படுகின்றனர். இங்கு ஆறுகள் மற்றும் பாரியகுளங்கள் எவையும் இல்லாமையால் விவசாய நடவடிக்கைகளை தரைக் கீழ் இருந்து பெறும் நீரின் உதவியுடனேயே மேற்கொண்டு வருகின்றனர் .

குறிப்பாக இரவு நேரங்களிலேயே இராணுவத்தினரின் வள அழிப்பு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. பகல் நேரங்களில் கீரிமலைக்குப் பிதிர்க் கடன் கழிக்கச் செல்லும் பொதுமக்களின் நடமாட்டம் இருப்பதன் காரணமாக இந் நடவடிக்கையை இரவு நேரங்களில் மேற்கொண்டு வருகின்றமை சுட்டிக்காட்டக்கூடியதாகும்.


இதற்கெனக்கொண்டு வரப்பட்ட பாரிய இயந்திரங்கள் மாவிட்டபுரம் கீரிமலை வீதியில் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்குத் தெற்குப் பக்கமாக வுள்ள அடர்ந்த பற்றைகளுக்குப் பின்னால்மறைவாக விடப்பட்டு இந் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. (41)

# சூடானைப்பற்றி...



சூடானின் சனாதிபதி





புலிற்சர் விருதுபெற்ற படம்

*சூடானில் பசி,பட்டினி ஏற்பட்ட போது தான் இந்த அவலம் நடந்தேறியுள்ளது. சிறுவன் ஒருவன் பசியால் வாடி வதங்கி மயங்கி விழும் தறுவாயில் இருக்கும் போது அச்சிறுவனை கொத்திச்சாப்பிடுவதற்காக கழுகு ஒன்று காத்திருப்பதை ஒரு படப்பிடிப்பாளர் தன் கமராவுக்குள் அடக்கிக்கொண்டார். இப்படம் Pulitzer விருது பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.*





1820-துருக்கி,எகிப்து ஆட்சியின் கீழ் சூடான்
1882-பிரித்தானியா சூடான் மீது படையெடுத்தல்
1885-இஸ்லாமிய சபை சூடானில் நிறுவுதல்
1899-பிரிட்டிஷ் எகிப்து சட்டங்களுக்கு உட்படுதல்
1955-கிளர்ச்சியும் சிவிலியன் போர் ஆரம்பம்.
1956-சுதந்திரம் பெற்றது.
1958-சிவில் நிர்வாகம் கலைக்கப்பட்டது.
1969-யபார் நும்மேரியின் கீழ் புதிய இராணுவம்.
1972-அடிஸ் அபாபாவில் சமாதான உடன்படிக்கை.
1985-இராணுவத்தலைவர் நும்மேரி நீக்கம்.
1986-சிவில் நிர்வாகம் கொண்டுவரப்பட்டது.
2001-3மில்லியன் மக்கள் பசி,பட்டினி
2001-மே-உதவிக்காக தென் சூடானுக்கு செஞ்சிலுவைச்சங்கம் சென்றது.
2001-ஆகஸ்ட்-நைல் நதி பெருக்கெடுத்தது.
2001-செப்ரெம்பர்-ஐ.நா உதவிக்குச் சென்றது.

| | | |
|---|---|---|
| *நாடு* | - | சூடான் |
| *மக்கள் தொகை* | - | 36,080,373 (2001 கணிப்பின் படி) |
| *தலைநகரம்* | - | அடிஸ் அபாபா |
| *பிறப்பு வீதம* | - | 37.89/1000இற்கு |
| *இறப்பு வீதம்* | - | 10.04/1000 இற்கு |
| *இனம்* | - | சூடானிஸ் |
| *சமயம* | - | சுனிமுஸ்லிம்,கிறிஸ்தவம் |
| *மொழி* | - | அரபிக்,நூபியன்,சூடானிக்மொழி,ஆங்கிலம். |
| *அமைவிடம* | - | வட ஆபிரிக்காவுக்கும் செங்கடல் எகிப்துக்கும் இடையில் |
| *பரப்பு-* | - | 2.376 மில்லியன் சதுர கிலோமீற்றர். |

தொகுப்பு:கா. சுரேன்

## ரோபோக்கள் மூலம் டாக்டர்கள் சிகிச்சை

மருத்துவ மனைகளில் படுக்கைகளில் சேர்க்கப்பட்ட நோயாளிகளை டாக்டர்கள் நேரில் பரிசோதித்து உடல் நிலை மற்றும் சிகிச்சைபற்றி முடிவு செய்கிறார்கள் அல்லவா? டாக்டர்கள் வராத பட்சத்தில் அவர்களுக்கு பதில் ரோபோக்கள் சென்று நோயாளிகளைப் பார்த்து சிகிச்சைக்கு உதவும் புதிய முறை லண்டன் செயின்ட் மேரீஸ் மருத்துவமனையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அந்த குறிப்பிட்ட நோயாளிகளின் டாக்டர்கள் உலகின் எந்தப் பகுதியில் இருந்தாலும் சரி நோயாளிகளை அந்த ரோபோக்கள் மூலம் வெகுதூரத்திலுள்ள டாக்டர்கள் நேரில் சந்திப்பது போல பார்த்து அவர்களின் உடல்நிலையையும் பரிசோதிக்க முடியும். நோயாளி பற்றிய பதிவுகளையும் தொலைவில் உள்ள டாக்டர்கள் சரிபார்க்க முடியும். அப்போது ரோபோவின் முகத்தில் இருக்கும் திரையில் தொலை தூரத்தில் உள்ள டாக்டர்களின் முகம் தெரியும். அந்த டாக்டருடன் நோயாளியும், நோயாளியுடன் டாக்டரும் ஒருவருக்கொருவர் பேசவும் முடியும். தூரத்தில் இருந்தபடியே சிகிச்சையும் அளிக்க இயலும். இதற்கு உதவும் இந்த ரோபோவுக்கு "சிஸ்டர் மேரி" என்று பெயரிடப்பட்டுள்ளது.

## நீரிழிவு நோயைக் குணப்படுத்த வெள்ளை அணுக்களைப் பாவிக்கலாமா?

தொடர்கிறது ஆராய்ச்சி

இன்சூலினை உற்பத்தி செய்யும் வெள்ளை அணுக்களை உருவாக்கும் முயற்சியில் விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். ஸ்பெயின் நாட்டைச்சேர்ந்த இந்த விஞ்ஞானிகள் எலிகளிடம் இருந்து இன்சூலின் உற்பத்தி செய்யும் ஸ்டெம்செல்களை (insulin-producing embryonic stem cells) பெற்ற பிறகு மனிதர்கள் மத்தியில் பயன்படுத்த முடிவு செய்துள்ளனர்.

இது பற்றி பெர்னட் சூரியா என்ற நிபுணர் கூறுகையில்,இன்சூலின் உற்பத்தி செய்யும் ரத்த வெள்ளை அணுக்களை உருவாக்குவதற்கான கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். மேற்படி ஆய்வு மூலம் கிடைத்த ரத்த வெள்ளை அணுக்களை நீரிழிவு வியாதியால் பாதிக்கப்பட்ட எலிகள் உடம்பில் செலுத்தப்பட்டதும் அவைகளின் சர்க்கரை அளவு இயல்பான நிலைக்குத் திரும்பியது.

இந்நிலையில் அடுத்தகட்ட முயற்சியாக நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து இன்சூலின் உற்பத்தி செய்யும் ரத்த வெள்ளை அணுக்களைப் பெறும் முயற்சியில் நிபுணர்கள் இறங்கியுள்ளனர். ஒரு வேளை இத்தகைய அணுக்கள் கிடைக்கப் பெறும் பட்சத்தில் அவைகளை நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் உடம்பில் மீண்டும் செலுத்துவதன் மூலம் அவர்களின் இன்சூலின் உற்பத்தி இயல்பு நிலைக்குத்திரும்ப வாய்ப்பு இருப்பதாக இவர்கள் தெரிவிக்கின்றனர். இது தொடர்பாக மேற்கொண்டு ஆய்வு நடந்து வருகிறது.

## டிஜிட்டல் மொபைல் போனால் ஆபத்து...

டிஜிற்றல் மொபைல் போன் பயன்படுத்தும் போது நகர்ப்புறங்களில் இவற்றைப் பயன்படுத்துவதைவிட கிராமப்புறங்களில் இவை மூலம் பேசுவோருக்கு மூன்று மடங்கு கூடுதல் ஆபத்து உள்ளதென ஒரு ஆய்வு கூறுகிறது. கிராமப்புறங்களில் இவற்றைப் பயன்படுத்தும் போது கூடுதல் அணுத்துகள்களை இவை வெளியேற்றுகின்றன. நகர்ப்புறங்களில் சிக்னல்கள் தொடர்பு நிலையங்கள் ஓரளவு அருகாமையில் உள்ளன. ஆனால் கிராமப்புறங்களில் இருந்து இவை மிக அதிக தொலைவில் அமைந்துள்ளன. எனவே டிஜிற்றல் மொபைல் போனில் இருந்து வெளியாகும் எமிஷன்கள் கிராமப்புறங்களில் மூன்று மடங்கு கூடுதல் பாதிப்பை உருவாக்கும் ஆபத்து உண்டு. அதாவது பயன்படுத்துவோரின் மூளையில் கட்டிகள் ஏற்படும் ஆபத்துள்ளது என்கிறது ஆய்வு.

## சிறுநீரக புற்று நோய்க்கு புதிய மருந்து கண்டுபிடிப்பு

Renal Cell Carcinoma என்பது சிறுநீரகப் புற்று நோயில் ஒரு வகை.இந்த புற்றுநோய் உடம்பின் மற்ற பாகங்களுக்குப் பரவுவதைத் தடுக்க sorafenib என்ற புதிய மருந்து வந்துள்ளது. அமெரிக்க உணவுகள் மற்றும் மருந்துகள் நிர்வாக ஆணையகம் இந்த மருந்துக்கு ஒப்புதல் அளித்து இருக்கிறது. இந்தமருந்து புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியைத்தடுத்து நிறுத்துவதுடன், புற்று நோய் பரவுவதற்கு இடம் கொடுக்கும் செல்களின் ஏற்பிகளையும் முடக்கி போடுகிறது. மேற்படி மருந்து ஒரே நேரத்தில் இரண்டு வித மாகச் செயற்படுவதால் புற்றுநோய் ஆபத்து பரவுவது தடுக்கப்படுவதுடன், ஏற்கனவே இருந்த புற்றுநோய் ஆபத்தும் கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பிக்கும்.

ஆர்.சி.சி வகை புற்று நோயயைக் குணப்படுத்த interferon என்ற மருந்து தற்போது புழக்கத்தில் உள்ளது. இருப்பினும் ஆரம்பத்தில் இருந்து ஓரளவுக்கேனும் கை கொடுத்தது என்ற போதிலும், காலம் செல்லச் செல்ல மருந்தின் திறமை குறைவது தெரிய வந்தது. இந்நிலையில் sorafenib சிறந்த மருந்தாகக் கருதப்படுகிறது.

ஒருபணப்பை போன்று உருவாக்கப்பட்ட தொலைக்காட்சிப் பெட்டியையே இங்கு காண்கிறீர்கள். இது. 9.6 சதுர அங்குல பரப்புள்ள திரையைக் கொண்டிருக்கிறது.

தொலைக்காட்சிப் பெட்டி உற்பத்தியில் புதிய புரட்சியை ஏற்படுத்தும் வகையில் தாய்வான் உற்பத்தி செய்துள்ள இந்தத் தொலைக்காட்சியின் விலை 25 ஆயிரம் தாய்வான் டொலர்களாகும்.



## முடிமுளைக்கும் தைலம்

ஜப்பானில் பிரபல நிறுவனமான சிசய்டோ காஸ்மெடிக் நிறுவனம் பல வாசனைத் திரவியங்களைத் தயாரித்து வெளியிட்டுள்ளது தற்போது சிசய்டோ நிறுவனம் புதிய முடி முளைக்கும் தைலம் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இந்தத் தைலத்திற்கு இன்டனோஜென் என்று பெயர். தலையில் முடி உதிர்ந்தவர்கள் அல்லது வழுக்கை விழுந்தவர்கள் இந்த அடனோஜென் தைலத்தைப் பயன்படுத்தி பயன்பெறலாம். அடனோஜென் முடி முளைக்கும் தைலம் நல்ல முறையில் பயன்தருவதாகவும் அதனால் ஜப்பானில் நல்ல விற்பனையை எட்டியுள்ளதாகவும் கூறப்படுகிறது. ஜப்பான் மார்க்கெட்டில் 10 சதவீத விற்பனையை அடனோஜென் எட்டியுள்ளது. இந்தத் தைலம் முடி முளைக்க உதவும் ஹார்மோன்களைச் சுரக்க உதவுகிறது. இதன் மூலம் பக்கவிளைவுகள் ஏதும் இல்லை. இந்த அடனோஜென் கடந்த ஆண்டு முடிய 3500 கோடிக்கு ஜப்பான் முழுவதும் விற்பனை ஆகியுள்ளது.

# தமிழ் மொழியின் சிறப்பு

**26.06.2005-02.07.2005 வரை கனடாவில் அனுஷ்டிக்கப்படவுள்ள தமிழ் வாரத்தை ஒட்டி இக் கட்டுரை எழுதப் பட்டுள்ளது.**

**இன்று** உலகில் 2700 மொழிகளும் 7000 கிளை மொழிகளும் பேசப்படுகின்றன. எனினும் இற்றைக்கு 3000 ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றால் மிகச் சில மொழிகளே பேச்சு வழக்கு, எழுத்து வழக்கோடு இலக்கண வரம்பும் இலக்கிய வளமும் கொண்டு விளங்கின. இலத்தீன், கிரேக்கம், கீபுறு, எகிப்தியம், அரபு, தமிழ், சீனம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளை இத்தகைய தகைமைகள் கொண்டிருந்த மொழிகள் எனலாம்.

இம்மொழிகளுள் இலத்தீன் மொழி இன்றுள்ள ஐரோப்பிய மொழிகள் அனைத்தின் வளர்ச்சிக்கும் செழுமைக்கும் பங்களித்து இறந்த மொழியாகி விட்டது. எகிப்திய மொழியை எகிப்திய மக்கள் மறந்து அரபு மொழி பேசுவோர் ஆகிவிட்டனர். அந்த மொழி இறந்த மொழியாகி விட்டது. சமஸ்கிருதமொழி இந்தி முதலாய வட இந்திய மொழிகளின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஏதுவாக அமைந்து இறந்த மொழி ஆகிவிட்டது.

எனவே மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட எழுதப்பட்ட மொழிகளுள் சீனம், கிரேக்கம், அரபு, கீபுறு மற்றும் தமிழ் ஆகியனவே எஞ்சியுள்ள மொழிகளாகும். இந்நிலையில் உலகில் பேசப்படும் தொல் மொழிகளுள் தமிழும் ஒன்று என்பது அதன் முதற் சிறப்பாகும். இயேசுநாதர் பிறப்பதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே இலக்கிய நோக்கங்களுக்காகத் தமிழ் எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டதெனக் கொள்வதில் எந்தத் தவறும் இல்லை.

தமிழ் காலத்தால் மூத்த மொழி கருத்தாலும் முதிர்ந்த மொழியாகும். இன்று எமக்குக் கிடைத்துள்ள மிகப் பழைய நூல் தொல்காப்பியம். இது இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கு முந்திய ஓர் இலக்கண நூலாகும். இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்பே இலக்கணம் தோன்றும் என்பது மொழியியலாளர் முடிவாகும் எனவே தொல்காப்பியம் போன்றதொரு சிறந்த இலக்கண நூலைத் தரத்தக்க அளவுக்கு தமிழிலக்கியம் சிறந்திருக்க வேண்டும். தமிழிலக்கியம் சிறந்திருந்ததெனில் தமிழ் மொழியும் சிறந்திருக்க வேண்டும். தொல்காப்பியத்தில் அதன் ஆசிரியர் "என்ப" "மொழிப" "என்மார் புலவர்" என்று தனக்கு முன்பிருந்த நூல்களையும் புலவர்களையும் குறிப்பிடுகிறார் . எனவே தொலகாப்பியத்துக்கு முன்பு தமிழ் மொழி சிறப்புற்று இருந்தது என்பது வெளிப்படையாகும்.

தமிழ்மொழி காலத்தால் தொன்மையானது. இது இந்து மாகடலில் மூழ்கிப் போன குமரிக் கண்டத்தில் தோன்றியதென ஆய்வாளர் கருதுகின்றனர். தமிழர் குமரிக் கண்டத்தில் தோன்றியதால் தமிழும் அக் காலத்திலேயே தோன்றியிருக்க வேண்டும் என்பது அறிஞர் தேவநேயப்பாவாணர் முடிவாகும். தமிழ்மொழி 50000 ஆண்டுக ளுக்கு முன் தோன்றியிருந்தாலும் மிக நெடுங்காலத்திற்குப் பின்பே அது சிறந்தோங்கியிருக்க வேண்டும். சங்க இலக்கியங்கள் இதற்கு சான்றாகும்.

தமிழ்மொழியில் காதல், போர், கொடை பற்றிப் பேசும் சங்க இலக்கியங்கள், வாழ்க்கை நெறிகளைக் கூறும் அற இலக்கியங்கள், இறைவன் புகழ்பேசும் பக்தி இலக்கியங்கள், வாழ்வியல் பற்றிக் கூறும் காப்பிய இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் மொழிபெயர்ப்பு இலக்கியங்கள், நாட்டார் இலக்கியங்கள், புதினம், சிறுகதை, நாடகம் முதலிய இக்கால இலக்கியங்கள் எனப் பெருமளவு இலக்கியங்கள் தோன்றியுள்ளன.

உலகிலுள்ள மொழிகளில் பக்தியை வெளிப்படுத்தச் சிறந்த மொழி தமிழ் என்பது மொழியியலாளர் முடிவாகும். தமிழில் சைவம், வைணவம், சமணம், பௌத்தம், கிறிஸ்தவம், இசுலாம் ஆகிய சமய நூல்கள் தோன்றியுள்ளன. வேறெந்த மொழி யிலும் இவ்வாறு மூல நூல்கள் தோன்ற வில்லை. இது தமிழ் மொழிக்கேயுரிய சிறப் பாகும்.

உலகில் உள்ள எல்லா மொழிகளுமே எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் கொண்டுள்ளன. எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமன்றி வாழ்க்கைக்கும் அகம், புறம் என இலக்கணம் வகுத்த பெருமை தமிழ் மொழிக்கு மட்டுமே உண்டு. மேலும் "ழ" என்ற எழுத்தும் ஒலியும் தமிழுக்கு மட்டுமேயுள்ள தனிச்சிறப்பாகும்.

பிற மொழிகளது துணையின்றி இலங்கக் கூடிய மொழிகளைச் செம்மொழிகள் என்பர் தமிழ் மொழியும் பிற மொழிகளது துணையின்றி இயங்கவல்ல ஒரு செம்மொழியாகும். ஒரு மொழியைச் செம்மொழியெனக் கூறுவதற்குத் தொன்மை, தனித்தன்மை, பொதுமைப்பண்பு, நடுநிலைமை, தாய்த்தன்மை, கலைபண்பாட்டுப்பட்டறிவு வெளிப்பாடு, பிறமொழித் தாக்கம் இல்லாத் தனித்தன்மை, இலக்கியவளம், உயர் சிந்தனை, கலை இலக்கிய தனித்தன்மை வெளிப்பாடு, மொழிக் கோட்பாடு ஆகிய 11 தகைமைகள் இருக்க வேண்டும் என்று கூறுவர். இந்தப் 11 தகைமைகளையும் தமிழ் மொழி மட்டுமே கொண்டுள்ளது என்பது தமிழுக்குள்ள உயர் தனிச்சிறப்பாகும். இலத்தீன் மற்றும் கிரேக்க மொழிகள் எட்டுத் தகைமைகளையும், சமஸ்கிருத மொழி ஏழு தகைமைகளையும் கொண்டுள்ளன என்பது மொழியியலாளர் கணிப்பாகும்.

பிற இனத்தவர், நாட்டவர் தமிழரை ஆட்சி புரிந்ததன் விளைவாகவும் தமிழர் பிற நாட்டவரோடு வணிகம் செய்ததன் பெறு பேறாகவும் தமிழரது அறியாமையாலும் பிற நாட்டு மொழிப் பெருவிருப்பாலும் தமிழ் மொழியில் பிற மொழிச் சொற்கள் கலந்திருக்கின்றன. பிறமொழிச் சொற்களை நீக்கி விட்டால் தமிழ் மொழி மேலும் ஒளிரும் என்று பேரறிஞர் கார்டுவெல் கூறியுள்ளமை இவ்விடத்தே நோக்கத்தக்கது.

ஐரோப்பிய அறிஞர்களான வண.பெங்ஸகி, வண. யு.சி.போப், வண கிராஸ், வண, பேர்சிவல் மாக்ஸ்முல்லர் கார்டுவெல், விட்னே போன்ற மொழி அறிஞர்கள் தமிழ் மொழியின் சிறப்பை வியந்து பாராட்டியுள்ளனர் .

தமிழ் மிகப் பண்பட்ட மொழி தனக்கே உரித்தான இயல்பாக வளர்ந்த சிறந்த இலக்கியச் செல்வம் உடைய மொழி என்றும் மாக்ஸ்முல்லர் தமிழைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார் . ஆற்றல் மிக்கதாகவும் சில சொற்களால் கருத்தைத் தெரிவிப்பதாகவும் விளங்குவதில் தமிழ்மொழியை எந்த மொழியும் விஞ்ச முடியாது என்றும் உள்ளத்தின் வெற்றியை எடுத்துக் காட்டுவதில் வேறு எந்த மொழியும் தமிழை விட இயைந்ததாக இல்லை என்றும் பெர்சிவல் என்னும் அறிஞர் எடுத்துரைத்துள்ளார் .

ஒரு நூற்றாண்டின் முன் மொழியாராய்ச்சியில் ஈடுபட்டுத் தொண்டு ஆற்றிய விட்னே என்னும் அறிஞர் தம் நூலில் தமிழ் மொழியைப் போற்றிக் குறிப்பிட்டுள்ளார் .

தமிழ் மொழியானது செந்தமிழ், பைந்தமிழ், அந்தமிழ், அருந்தமிழ், இன்றமிழ், தென்றமிழ், தீந்தமிழ், தேன்றமிழ், நறுந்தமிழ், நற்றமிழ், தண்டமிழ், வண்டமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ் என்றெல்லாம் போற்றப்பெறுவதோடு அது தொன்மையும் முன்மையும், தாய்மையும் தூய்மையும், இளமையும் வளமையும், உண்மையும் நுண்மையும், தனிமையும் இனிமையும் நிறைந்து விளங்குகிறது.

சங்ககாலம் வரையில் மிகச் செழிப்பாக வளர்ந்து வந்த தமிழ் மொழி அதற்குப் பின்னர் ஆரியரின் வேத மதத்தாலும் சமண பௌத்த மதங்களாலும் தாக்குண்டு படிப் படியாக சீர்கெட்டது. ஆரியரின் வேத மொழியும் பிராகிரதமும் பாளியும் கலந்து செய்யப்பட்ட சமஸ்கிருதமும் தமிழ் மொழியோடு கலந்து தமிழ் மொழியைச் சீர் குலைத்தன. இதனால் தமிழ் மொழி திரிபுற்று சிதைந்து தெலுங்கு கன்னடம் மலையாளம் துளு முதலாகிய 22 மொழிகளாகப் பிரிந்தது. வேத ஆரியர்களும் தமிழ் நூல்களை சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்துக் கொண்டு மூல நூல்களை அழித்தனர்.

சமயத் தாக்கங்கள் மட்டுமன்றி தமிழக அரசியலில் ஏற்பட்ட தாக்கங்களும் தமிழ் மொழியை சீர்குலைத்தன. களப்பிரர் பல்லவர் காலத்தில் தமிழ் மொழி புறக் கணிக்கப்பட்டு வடமொழிக்கு முதன்மை வழங்கப்பட்டது. அதன் பின்னர் தமிழ் நாட்டில் வணிகமும் ஆட்சியும் செய்த அரபியர், ஐரோப்பியர் செல்வாக்கால் மேலும் தமிழ் மொழி கலப்புற்றது. இதன் விளைவாக தொல்காப்பியம் சங்க இலக்கியங்கள் மற்றும் திருக்குறளுக்குப் பின்பு எழுந்த இலக்கியங்களில் வடமொழி பேரளவிலும் பிற மொழிகள் சிற்றளவிலும் கலந்துள்ளமையைக் காணலாம். இன்றைய தமிழரும் அறிந்தும் அறியாமலும் தமிழோடு பிற மொழிகளைக் கலந்து பேசியும் எழுதியும் வருகின்றனர். இந்நிலை நீக்கித் தமிழின் தனித்தன்மையைப் பேண இத்தமிழ்க் கிழமையில் நாமனைவரும் உறுதி கொள் வோமாக.

– ச.குகதாசன்

# தமிழேந்தி முன்பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் டென்மார்க் அகதிகள் பேரவை (DRC) யின் நிதியுதவியுடன் வவுனியா கிழவிகுளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தமிழேந்தி முன்பள்ளியின் புதியகட்டடத்திறப்புவிழா நிகழ்வு இடம் பெற்றுள்ளது.



மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க் அகதிகள் பேரவையின் பிரதிநிதியாக அதன் திட்டப் பணிப்பாளர் ரஞ்சன், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துணைநிறைவேற்றுப் பணிப பாளர் ரவிச்சந்திரன், தமிழீழ அரசியல்துறை துணைப் பெறுப்பாளர் சோ.தங்கன் , வவுனியா மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம், தமிழர் புனர்வாழ்வுக் கழக வவுனியா மாவட்ட பணிப்பாளர் மூர்த்தி, வலயக்கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி மற்றும் பல முக்கியஸ்தர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள், பொது மக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர். தமிழர் புனர்வாழ்வுக் கழக மாவட்டப் பணிப்பாளரின் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் டென்மார்க் அகதிகள் பேரவையின் நிறுவனப் பிரதிநிதி ரஞ்சன் அவர்கள் பாடசாலையினை வைபவரீதியாக நாடாவினை வெட்டித் திறந்து வைத்தார்.

டென்மார்க் அகதிகள் பேரவை நிறுவனத்தின் நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினால் இம் முன்பள்ளியானது சுமார் எட்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியில் முன் பள்ளிச்சிறார்கள் சிறப்பான தொரு சூழலில் கல்வி கற்கக்கூடியவாறு ஏற்படுத்தப்பட்டது. (சோ)

# ஆரம்பப் பாடசாலை புதிய கட்டடத் திறப்பு விழா

(அலுவலக செய்தியாளர்)

வவுனியா மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் அதன் இணை நிறுவனமான வவுனியா அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனத்தினால் டென்மார்க் அகதிகள் பேரவை (DRC)யின் நிதிப்பங்களிப்புடன் வவுனியா மாதர்பணிக்கமகிழங்குளம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள ஆரம்பப்பாடசாலையின் புதிய கட்டடத்திறப்புவிழா நிகழ்வு கடந்த புதன்கிழமையன்று காலை 10.00 மணியளவில் நடைபெற்றது. மாதர்பணிக்கமகிழங்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை அதிபர் இந்திரகுமார் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் தண்டாயுதபாணி பாடசாலையின் கல்வெட்டினை வைபவரீதியாகத் திரைநீக்கம் செய்துவைத்தார்.



மேற்படி நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக டென்மார்க் அகதிகள் பேரவையின் பிரதி நிதியாக அதன் திட்டப் பணிப்பாளர் ரஞ்சன், தமிழர் புனர்வாழ்வுக் கழக துணை நிறைவேற்றுப் பணிப்பாளர் ரவிச்சந்திரன், தமிழீழ அரசியல் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், வவுனியா மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் ஞானம், தமிழர் புனர் வாழ்வுக்கழக வவுனியா மாவட்டப் பணிப்பாளர் மூர்த்தி, வலயக்கல்விப் பணிப்பாளர் தண்டாயுதபாணி மற்றும் முக்கியஸ்தர் கள், பிரதிநிதிகள், முன் பள்ளி ஆசிரியர், மாணவர்கள், பொது மக்களெனப் பெருமளவானோர் கலந்து சிறப்பித்தனர்.

100'x25' விஸ்தீரணத்தில் இருபத்தைந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப் பெற்றுள்ளது. (சோ)

# Immediate Vacancy

## Accantant

Applications are requested form experienced persons in the field of accounting and financial management.

Solidar is a consortium of organizations from 12 European countries that supports a broad portfolio of project sin Sri Lanka- focusing particularly in the north east. The accountant would work under the directive of the Head of Mission of Swiss Labour Assistance- SAH,a member of SOLIDAR.

The position is based in Kilinochchi with occasional travels to Colombo and the field.

**Duties are:**

- Collecting and processing invoices and receipts.
- Advising local partners in accounting procedures.
- Keeping financial records.
- Processing monthly financial reports

**Required qualifications:**

- Proven record in accounting with excellent references
- Solid Computer skills (particularly EXCEL)
- Should be fluent in English and Tamil

Cover letter and curriculum vitae should be addressed to Dr. Karin Voigt and emailed to **karin voigt @ sah.ch or solidar admin @ sltnet.ik** or sent to 156 Jaffna Road , Paranthan, Kilinochchi.Applications are invited from male/ female candidates including persons with disabilities that possess relevant experience. Deadline for applications is 20th June though early submission is encouraged.

Swiss Labour Assistance SAH (சி-12198) solidar



# Immediate Vacancies

german agro action

The Tsunami Project, Tsunami Office ,Sewa Lanka Foundation is inviting applications from interested eligible candidates who meet the qualification appended below for the following Positions in the Tsunami affected areas of Vadamaradchi North, Marutankerny and Mullaitivu Finanlced by the German Agro Action (G.A.A) the Poject will undertake the rehabilitation and roconstruction of infrastructures damaged by Tsunami.

01. Project Engineer (Civill Engineer) - Position - 01 No
B.Sc Engineering (Civil) and mambership of a recognised Professional Institution or equivalent with more than 5 years Post qualifying experiences in the capacities of project Engineer, Site manager or Site Engineer of a Building & Road construction project

02. Superintendent of Civil works - Positions - 03 Nos
N.D.T orHNDE in Civil Engineering from recognised Institute or University of Moratuva or Hardy Institute or equivalent with minimum five years experiences in Buildings and Road construction proect

03. Civil work Supervisors - positions - 06 Nos
N.C.T. or Equivalent with more than three years experiences in Building works Remuneration packages are negotiabla and commensurate with qualification, experiences and ability to produce results

If you with to accept this challenging opportunity Pleasefax or mail your resume with the copies of your curriculum Vitae before 18 th June 2005.

**project Director,**
**Tsunami projrct,**
**Tsunami Office,**
**G.A.A/Sewa Lanka Foundation,**
**Thirunagar**
**Kilinochchi** **Fax No:- 021 2283957**

(6251)


# கேள்வி அறிவித்தல்

## வவுனியா வடக்கு பிரதேச சபை, கனகராயன்குளம்

இதன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் 2005.06.23 ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். கட்டடப் பயிற்சி நிறுவனத்தின் (ICTAD) கட்டட வேலைக்காக ஆகக்குறைந்தது எம்:09 பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் பதிவு செய்யப்பட்ட சங்கம், சபைகளும் கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கலாம். (இக்ராட்) நிறுவனத்தில் பதிவு செய்யப்பட்ட சங்கங்கள், சபைகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

| வேலை விபரம் | மீளளிப்பு செய்யப்படாத வைப்புப் பணம் | மீளளிப்பு வைப்புப் பணம் |
|---|---|---|
| 01. சந்தைக் கட்டடம் அமைத்தல் நெடுங்கேணி | 500/= | 4750/= |
| 02. மலசல கூடம் அமைத்தல் நெடுங்கேணி | 500/= | 3300/= |
| 03. புதூர் புதுவிளாங்குளம் வீதித்திருத்தம் | 500/= | 2250/= |
| 04. சூடுவெந்தான் வீதியில் பாலம் அமைத்தல் | 500/= | 4000/= |

**நிபந்தனைகள்**

01. கேள்விப் பத்திரம் பெறுவதற்காக மீளளிக்கப்படாத வைப்புப் பணமும், மீளளிக்கப்படும் வைப்புப் பணமும் வவுனியா வடக்குப் பிரதேச சபையின் கனகராயன்குளம் அலுவலகத்தில் வைப்புச் செய்து பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து கேள்விப் பத்திரத்தைப் பெற்றக்கொள்ளலாம்.

02. பதிவு செய்யப்பட்ட சங்கம், சபைகள் வைப்புப்பணம் செலுத்தத் தேவையில்லை.

03. கேள்விப்பத்திரங்கள் 2005.06.07 ஆம் திகதிதொடக்கம் 2005.06.22 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை விநியோகிக்கப்படும்.

04. பூரணப்படுத்தப்பட்ட கேள்விபத்திரங்கள் 2005.06.23 ஆம் திகதி முற்பகல் 12.00மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு, செயலாளர், வவுனியா வடக்குப்பிரதேசசபை, கனகராயன்குளம் என்ற முகவரிக்குப்பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்க வேண்டும். நேரில் கேள்விப்பத்திரம் கையளிப்பதாயின் கனகராயன்குளத்திலுள்ள பிரதேசசபை அலுவலகத்தில் கையளிக்கலாம். இடதுபக்க மேல் மூலையில் கேள்விப் பத்திரத்தில் காட்டிய வேலை விபரம் என்ன என்பதைக் கடித உறையில் குறிப்பிடவேண்டும்.

05. கேள்விப்பத்திரங்கள் 2005.06.23 ஆம் திகதி பி.ப.3.00 மணிக்கு கனகராயன்குளம் பிரதேச சபை அலுவலகத்தில் திறக்கப்படும் உரிய படிவத்தில் அனுப்பப்படாத கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. தெரிவு செய்யப்பட்ட கேள்விப் பத்திரதாரர்கள் மூன்று நாட்களுக்குள் பிணைப்பணம் செலுத்தி என்னுடன் ஒப்பந்தம் ஒன்றிலும் கைச்சாத்திட வேண்டும்.


07. இது தொடர்பான மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

*க.ஞா.அகஸ்தீன்*
*செயலாளர்,*
*வவுனியா வடக்கு பிரதேசசபை,*
*கனகராயன்குளம்.*

(12047)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 - 04 - 1972



உதிர்வு 11 - 06 - 2004

அமரர்

## அம்புறோஸ் அலெக்ஸ் புறூஸ்ரன் (ஜெனி)

ஈரைந்து ஆண்டுகள்
எம்மோடு உடனிருந்தாய்
நினையாத நேரத்தில்
எமைவிட்டு சென்று விட்டாய்
விழிமூடும் நேரம் எல்லாம்
நினைவினிலே நீவருவாய் - உன்
கருவாகி உருவான உன் செல்வங்களுடன்
விழியோரம் கண்ணீரை உமக்காகச் சொரிகின்றேன்.

இவரின் ஆத்ம சாந்திக்காக வெற்றிலைக்கேணி புனித அந்தோனியார் ஆலயத்தில் காலை 8.30 மணிக்கு நடை பெறும் திருப்பலியிலும்,அன்னாரது இல்லத்தில் இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளவும்.

வெற்றிலைக்கேணி (6252) மனைவி, பிள்ளைகள்.

# தமிழ் தேசியக் கூட்டமைப்பின் போராட்டத்தில் ஐ.தே.க.வின் ஆதரவின்மைக்கு ரணில் கவலை!

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபையில் நடத்திய எதிர்ப்புப் போராட்டத்தை அலட்சியம் செய்யும் வகையில் ஐக்கிய தேசியக் கட்சியின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் நடந்துகொண்ட முறைக்கு கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கூட்டமைப்பின் யாழ். மாவட்ட எம்.பி. ரவிராஜிடம் கவலை தெரிவித்துள்ளார். திருகோணமலையில் மேலதிகமாகக் குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தை வாபஸ் பெறுமாறு கோரி கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் சபை நடுவாக நின்று ஆர்ப்பாட்டம் செய்து சபையின் வழமையான நடவடிக்கைகளுக்கும் இடையூறு விளைவித்தனர். ஆனால் ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு வழங்காமல் அலட்சியம் செய்து அரசாங்கத்திற்கு சாதகமாக நடந்து கொண்டனர்.கடந்த செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற விருந்த பிரேரணை மீதான விவாதத்தை ஆரம்பித்து வைத்த பாராளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய உரையாற்றினார். விவாதத்தை ஆரம்பிக்க வேண்டாம் எனவும் தங்கள் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்டுக் கொண்ட போதும் பாராளுமன்ற உறுப்பினர் கருஜெயசூரிய தொடர்ந்தும் உரை நிகழ்த்தினார். ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அதற்கு ஆதரவாகச் செயற்பட்டனர். இதனால் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆத்திரமடைந்தனர். இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது ரணில் விக்கிரமசிங்க சபையில் சமுகமளித்திருக்கவில்லை.பின்னர் அதுபற்றிக் கேள்வியுற்று சபை ஒத்திவைக்கப்பட்ட வேளை சபைக்குள் வந்த ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்ஜை அழைத்து மேற்படி சம்பவத்திற்காக கவலை தெரிவித்தார். தவறுதலாக நடந்துவிட்டது. உங்கள் போராட்டத்திற்கு ஆதரவு தருகின்றோம் எனவும் கூறினார்.

# 10 ஆயிரம் வெளிநாட்டவர் விசாவிற்கு விண்ணப்பம்

(கொழும்பு)

இலங்கையில் தங்கியிருக்கும் 10ஆயிரத்திற்கும் மேலதிகமான வெளிநாட்டவர்கள் தமக்கான விசாஅனுமதிப் பத்திரத்தை புதுப்பித்துத் தருமாறு இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பெரும்பாலும் சீனா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து இங்குவந்து விசாஅனுமதிக்காலத்திற்கும் மேலதிகமா தங்கியிருப்பவர்களே இவ்வாறு கோரிக்கை விடுத்திருப்பதாகத் குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் பி.டி.அபயக்கோன் தெரிவித்துள்ளார்.

சட்டவிரோதமாக இலங்கையில் தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களைக் கைது செய்வதற்கு நடவடிக்கையெடுக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர்,

இவ்வாறான நடவடிக்கையொன்று எடுக்கப்பட்ட பின்னர் சட்டவிரோதமாகப் பெருமளவானோர் இலங்கையில் தங்கியிருப்பது தெரிய வந்திருப்பதாகக் கூறினார்.

வெளிநாட்டிலிருந்து வருபவர்களில் பெருமளவானவர்கள் முதலீட்டு நிறுவனங்களில் தொழில்புரிந்து வருவதாகவும்,

எனினும், அவர்களுடைய விலாசங்கள் கொழும்பு விலாசங்களாகவே காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சட்டவிரோதமாகத் தங்கியிருக்கும் 10சீன நாட்டவர்களையும், இரண்டு இந்தியர்களையும் பொலிஸார் கைதுசெய்திருப்பதுடன், கைதுசெய்யப்பட்டவர்கள் அனைவரும் இளைஞர்களெனவும் குடிவரவு, குடியகல்வுக் கட்டுப்பாட்டாளர் பி.டி.அபயக்கோன் மேலும் கூறியுள்ளார்.

# இந்திய படைத்துரப்பினருடன் சிறிலங்கா கடற்படைத் தளபதி பேச்சு

(கொழும்பு)

இலங்கையின் முப்படைத்தளபதியும், கடற்படைத்தளபதியுமான வைஸ்அட்மிரல் தயாசந்தகிரி தலைமையிலான தூதுக்குழு இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளது.

இந்தத் தூதுக்குழுவினர் இந்தியாவின் காஷ்மீர் கட்டுப்பாட்டு எல்லை சார்ந்த பிரதேசங்களுக்கும், உடாம் பூரிலுள்ள வடக்கு கட்டளைத் தலைமையகத்துக்கும் நேரடி விஜயம் செய்து அங்குள்ள நிலைமைகளை கண்டறிந்ததாக இந்தியத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்திய வடக்குப் படையின் கட்டளைத்தளபதி லெப்டினனட் ஜெனரல் ஹரிஸ்பிரசாத் ஜம்முக்காஷ்மீர் விபரங்கள் குறித்து வைஸ்அட்மிரல் தயாசந்தகிரிக்கு விளக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தியாவும், இலங்கையும் மிக நெருங்கிய இராணுவ ஒத்துழைப்புக்களைக் கொண்டுவருவதாகப் பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் ஆர்.கே.சிப்பர் தெரிவித்தார் என்றும்,

இலங்கையின் இராணுவத்தினர் இந்தியாவில் பயிற்சி பெற்று வருவதை நினைவுபடுத்தியுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன, இதேவேளை இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இலங்கை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இலங்கை இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மின்சாரசபையை மறுசீரமைப்பது குறித்து புதிய யோசனை உதவிவழங்கும் நாடுகளுக்கு அனுப்பிவைக்க முடிவு

(கொழும்பு)

இலங்கை மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான புதிய யோசனைகள் சர்வதேச உதவி வழங்கும் நாடுகளுக்கு அனுப்பிவைக்கப் படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேசக் கூட்டுறவுகளுக்கான ஜப்பானிய வங்கி ஆகியவற்றிற்கு இந்தப் புதிய யோசனை அனுப்பிவைக்கப்படவிருப்பதாக மின்சாரசபைத் தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

மின்சாரசபை ஊழியர்களைப் பாதிக்காதவகையில் உருவாக்கப்பட்டுள்ள இந்தப் புதிய யோசனைகளை மின்சாரசபைத் தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகள் இணைந்து உருவாக்கியிருந்தனர்.

இந்த யோசனை தற்பொழுது மின்சக்தி எரிபொருள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கையளிக்கப்பட்டிருப்பதுடன்,

மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கு உதவி வழங்கவிருக்கும் சர்வதேச நிறுவனங்களுக்கும் அனுப்பிவைக்கப்படவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# அடுத்த சனாதிபதி வேட்பாளராக சரத்அமுனுகமவை நியமிக்கத் திட்டம்

இலங்கையின் ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் அடுத்த சனாதிபதி வேட்பாளராக எவரை நியமிப்பது என்ற சர்ச்சை உருவாகியுள்ள நிலையில் அடுத்த சனாதிபதி வேட்பாளராக சரத்அமுனுகமவை நியமிப்பதற்கு சந்திரிகா திரைமறைவில் செயற்பட்டு வருகின்றார் என தகவல்கள் கூறுகின்றன. சரத்அமுனுகம தற்போது அரசாங்கத்தில் நிதி அமைச்சராகச் செயற்பட்டு வருகிறார். இவர் ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து ஆளும் அரசிற்குக் கட்சி தாவியிருந்தவர். இவரைச் சனாதிபதியாக நியமிப்பதன் மூலம் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினதும், பொதுஜன ஐக்கிய முன்னணியினதும் வாக்குகளை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும் என சந்திரிகா கருதுவதாகவும் , ஐக்கிய தேசியக் கட்சியில் மக்கள் மத்தியில அதிக செல்வாக்கைப் பெற்றிருந்த சரத்அமுனுகம சனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதன் மூலம் எதிர்க்கட்சியில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவின் வாக்குகளையும் ஆளும் கட்சியில் பதவிப் போட்டியில் களமிறங்கியுள்ள சிலரின் வாக்குகளையும் முறியடிக்க முடியுமெனவும் சந்திரிகா கருதுவதாகவும் அறியமுடிகிறது.

# ஜப்பானிய அமைச்சர் வருகை

ஜப்பானின் உதவி வெளியுறவு அமைச்சர் இச்சிரோ ஐஸாவா நேற்று முன்தினம் அதிகாலை கொழும்பு வந்துள்ளார். இவர் இரண்டு நாட்கள் சிறிலங்காவில் தங்கியிருப்பார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது ஐஸாவா சிறிலங்கா வெளியுறவு அமைச்சர் லஷ்மன் கதிர்காமர் உட்பட பலரைச் சந்திக்கவுள்ளார். ஆழிப் பேரலையின் பின்னர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் மற்றும் இருதரப்பு உறவுகள் குறித்து ஐஸாவா கலந்துரையாடவுள்ளதாக ஜப்பானிய தூதரகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.(32)

# ஜயலத்தின் பாதுகாப்பு குறைப்பு

தனது பாதுகாப்பைக் குறைத்துள்ளதால் தனது உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

தனது பாதுகாப்பு குறைப்புப் பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவித்துள்ள போதிலும் உரிய பதில் ஏதும் கிடைக்கவில்லை என்பதையும் அவர் சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளார்.


# பகிரங்க ஏல விற்பனை

*கிளிநொச்சி D67 பெரிய பரந்தன் ஊரியான் பகுதிகளில் பயிரழிவு செய்த கால்நடைகள் கட்டுப்படுத்தப்பட்டு உரிமை கோராத நிலையில் கீழ் வரும் விபரப்படி ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.*

**கிளிநொச்சி 15.06.2005 பொதுப்பட்டி காலை 10.00**
**D67 பெரியபரந்தன் 15.06.2005 பொதுப்பட்டி காலை 10.00**
**ஊரியான் 16.06.2005 பொதுப்பட்டி காலை 10.00**

| இல. | நிறம் | இனம் | குறி |
|---|---|---|---|
| 01. | செங்காரி | பசு | குறியில்லை |
| 02. | மாவெள்ளை | பசு | குறியில்லை |
| 03. | கறுப்பு | பசு | T.S |
| 04. | சிவப்பு | பசு | S.R |
| 05. | சிவப்பு | பசுக்கன்று | S.R |
| 06. | மாவெள்ளை | பசுக்கன்றுடன் | S.S |
| 07. | மாவெள்ளை | நாம்பன் | P.P |
| 08. | கருவெள்ளை | நாம்பன் | குறியில்லை |
| 09. | கறுப்பு | நாம்பன் | குறியில்லை |
| 10. | கறுப்பு | பசு | P.P |
| 11. | மயிலை | பசு | S.G |
| 12. | சிவலை | நாம்பன் | K.T |
| 13. | சிவலை | பசு | தி.பி |
| 14. | செங்காரி | பசு | தி.பி |
| 15. | கருவெள்ளை | பசு | தி.பி |
| 16. | 4 கடாமாடு | பசு | மு |
| 17. | மாவெள்ளை | நாம்பன் | மு |
| 18. | கருவெள்ளை | கருவெள்ளை | மு |
| 19. | மாவெள்ளை | பசு | கா |
| 20. | செங்காரி | பசு | K.N |

**இவ்வண்ணம்**
**த.பொ.மே.நிறுவனம்,**
**கிளிநகர்.**

(6250)



# 31ஆம் நாள் நினைவும் அந்தியேட்டி அழைப்பும்

**மண்ணில்** 24 - 10 - 1950



**விண்ணில்** 12 - 05 - 2005

அமரர்

## தங்கவேல்-வரதலக்சுமி

*அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை*

*12. 05. 2005 அன்று இறைபதமடைந்த எமது அன்புத்தெய்வத்தின் 31ஆம் நாள் நினைவாக வரும் 11. 06. 2005 காலை 5. 00 மணியளவில் அன்புத்திட்டம் 1ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.*

*குறிப்பு:-*

தயவு கூர்ந்து இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்..

தகவல்,
**குடும்பத்தினர்**
**(வரதலக்சுமி உணவகம்)**
**அம்மன் கோவிலடி**
**வல்வெட்டித்துறை.**

முகவரி,
அன்புத்திட்டம்,
1ஆம் வட்டாரம்,
புதுக்குடியிருப்பு. (6247)





லெப். கேணல் சாள்ஸ் நினைவாக கடற்புலிப் போராளி அணிகளுக்கிடையே நடைபெற்ற மரதன் ஓட்ட நிகழ்வின்போது தயார் நிலையில் நிற்கும் போராளிகள். (படம் : தவரட்ணம்)

## லெப். கேணல் கங்கைஅமரன் நினைவாக மின்னொளியிலான கரப்பந்துப் போட்டி

மாவீரர் லெப். கேணல் கங்கை அமரன் நினைவாக தமிழீழ விளையாட்டுத்துறையின் மன்னார் மாவட்டப் பிரிவினரும் கால்பந்தாட்ட சங்கமும் இணைந்து நடாத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டப் போட்டி மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி, முல்லை, வவுனியா, திருமலை மாவட்டங்களில் இருந்து பல அணிகள் கலந்துகொள்ளும் மேற்படி போட்டிகள் எதிர்வரும் 22ஆம் திகதி முதல் 29ஆம் திகதி வரை நடைபெறவுள்ளன. (சோ)




## அமரர் பூஜிதா ஞாபகார்த்த மாபெரும் விளையாட்டுப் போட்டி

அமரர் பூஜிதா ஞாபகார்த்த கால்பந்து, வலைப்பந்து, கிரிக்கெட் போட்டிகள் கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் எதிர்வரும் தினங்களில் நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட விளையாட்டுத்துறையின் அனுசரணையுடன் கனகபுரம் விளையாட்டுக்கழகம் மேற்படி போட்டிகளை நடாத்துகின்றது.

இதன் முதலாவது போட்டியாக கிரிக்கெட் போட்டி நாளை மறுதினம் 8.30 மணிக்கு ஆரம்பமாகின்றது எனவும், கால்பந்து போட்டி எதிர்வரும் புதன்கிழமை 1.30 மணிக்கும் மற்றும் வலைப்பந்து போட்டிகளும் சமநேரத்தில் நடைபெறும் என போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இச்சுற்றுப் போட்டிகளில் மாவட்டத்தின் பல்வேறு விளையாட்டுக்கழகங்கள் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது. இறுதிப் போட்டிகள் எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உலகக் கோப்பை தகுதி கால்பந்துப் போட்டி

## பிரேசில் அணி அதிர்ச்சித் தோல்வி





உலகக் கோப்பை கால்பந்துத் தொடருக்கு ஆர்ஜென்டீனா தகுதி பெற்றுள்ளது. பிரேசில் தகுதிச் சுற்றில் அதிர்ச்சித் தோல்வியடைந்தது.

2006இல் ஜேர்மனியில் உலகக் கோப்பை காலபந்து தொடர் நடக்கவுள்ளது. இதற்கான தகுதிச் சுற்றுப் போட்டிகள் உலகின் பல்வேறு இடங்களிலும் நடந்து வருகின்றன. தென்அமெரிக்க பகுதிக்கான தகுதிச் சுற்றுப் போட்டியில் ஆர்ஜென்டீனா, பிரேசில் அணிகள் மோதின. தொடக்கத்தில் இருந்தே ஆர்ஜென்டீனா வீரர்கள் அபாரமாக ஆடினர். இந்த அணியின் தலைவர் ஹர்னன் கிரஸ்போ இரண்டு கோலும், ஜுவான்ரோமன் ஒரு கோலும் அடிக்க வலுவான முன்னிலை பெற்றது. இரண்டாவது பாதியில் ராபர்டோ கார்லோஸ் ஒரு கோல் அடித்து பிரேசில் அணிக்கு ஆறுதல் அளித்தார். இறுதியில் ஆர்ஜென்டீனா 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இதன் மூலம் 31 புள்ளிகளுடன் உலகக் கோப்பை தொடருக்கு தகுதி பெற்றது. எட்டு முறை உலகக் கோப்பை தொடரில் விளையாடியுள்ள இந்த அணி 1976, 1986 இல் சம்பியன் பட்டம் வென்றுள்ளது. நடப்பு சாம்பியனான பிரேசில் 27 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலுள்ளது. ஆசிய மண்டல 'பி' பிரிவுப் போட்டியில் ஜப்பான் 2-0 என்ற கோல் கணக்கில் வடகொரியாவையும், ஈரான் 1-0 என்ற முன்னிலையில் பஹ்ரேனையும் வீழ்த்தின. ஏ பிரிவில் தென்கொரியா 4-0 என்ற முன்னிலையில் குவைத்தையும், சவுதிஅரேபியா 3-0 முன்னிலையில் உஸ்பெகிஸ்தானையும் வீழ்த்தின. இந்த வெற்றியின் மூலம் ஜப்பான், ஈரான், தென்கொரிய, சவுதிஅரேபிய அணிகள் உலகக் கோப்பைத் தொடருக்கு தகுதிபெற்றன.



இது 'பிபா' கவுன்ட்டவுன் 2006 உலக கோப்பை கால்பந்து போட்டிகளை ஜேர்மனி ஏற்று நடத்துகிறது. இதற்கான விசேட ஏற்பாடுகள் சிறப்பாக நடந்து வருகின்றன. தலைநகர் பெர்லினில் இந்த தொடருக்கு எத்தனை நாட்கள் உள்ளன என அறியும் விதத்தில் பிரமாண்ட 'பிபாகவுன்ட்டவுன'கடிகாரம் ஒன்றை ஜேர்மனி அரசு அமைத்துள்ளது. உலக கோப்பை இறுதிப் போட்டி வரை இந்தக் கடிகாரம் இயங்கும்.

## 20 ஓவர் கிரிக்கெட் போட்டி

## அவுஸ்திரேலிய அணிக்கு வெற்றி



நேற்று முன்தினம் இங்கிலாந்தின் அருண்டேல் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் அதிகாரிகள் 11 பேர் அணிக்கும் அவுஸ்திரேலிய அணிக்குமிடையில் நடைபெற்ற இருபது ஓவர் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியில் அவுஸ்திரேலிய அணி எட்டு விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.


இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய கிரிக்கெட் அதிகாரிகள் சங்க 11 பேர் அணித் தலைவர் ஸ்ரீபன்பிளமிங் அவுஸ்திரேலியாவின் பிரட்லீயின் முதலாவது பந்திலேயே பொண்டிங்கிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். அவ்வணியின் டரன் மடி என்ற வீரர் ஆட்டமிழக்காது பெற்ற 70, கொலின்வூட் பெற்ற 53, ஈலாம் பெற்ற 39 என்ற ஓட்டங்களின் உதவியுடன் 20 ஓவர் முடிவில் ஆறு விக்கெட்டுக்களையிழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. டரன் மடி மெக்ராத்தின் கடைசி ஓவரில் ஒரு பவுண்டரி ஒரு சிக்சர் அடங்கலாக 25 பந்துகளில் 39 ஓட்டங்களைப் பெற்றார் என்பதும், இவர் கவுண்டி அணி வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பந்து வீச்சில் அவுஸ்திரேலியா சார்பில் மைக்கல் கிளார்க் மூன்று விக்கெட்டுக்களையும், பிரட்லீ, மெக்ராத் தலா ஒவ்வொரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

- பதிலுக்கு 168 ஓட்டம் என்ற வெற்றியிலக்கு நோக்கி ஆடிய அவுஸ்திரேலியா கில்கிறிட்ஸ், ஹெய்டன் ஆகியோரின் சிறப்பாட்டத்தின் மூலம் ஒரு பந்து வீச்சு எஞ்சிய நிலையில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 170 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது. ஹெய்டன் 79 ஓட்டங்களையும், கில்கிறிட்ஸ் 53 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்தனர். அணித்தலைவர் பொண்டிங், டேமியன் மார்ட்டின் இருவரும் ஆட்டமிழக்காதிருந்தனர்.

11 பேர் அணி சார்பில் கொலின்வூட்டும், ட்ரம்லட்டும் ஒவ்வொரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

## அணியின் வெற்றிக்காக மூத்தவீரர்கள் கடுமையாக உழைக்க வேண்டும் சப்பல்



"அணியின் வெற்றிக்காக அனைவரும் கடுமையாக உழைக்க வேண்டும்'' என மூத்த வீரர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்இந்திய அணியின பயிற்சியாளர் கிரெக்சப்பல்.

இந்திய கிரிகெட் அணியின் புதிய பயிற்சியாளராக வரும் 15இல் சப்பல் பொறுப்பேற்கிறார் எதையும் வெளிப் படையாக பேசக்கூடிய இவர் மூத்த வீரர்களின் மன நிலை பற்றியே அப்படிக்கூறினார். இதைத் தவிர பல்வேறு விடயங்கள் குறித்து சப்பல் அளித்த பேட்டி. இந்திய அணி சில துறைகளில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஒவ்வொருவரும் முழுமையாக பாடுபட்டால் தான் வெற்றிகளை குவிக்க முடியும். மூத்த வீர்களில் சிலர் கடினமாக உழைக்க விருப்பமில்லாமல் இருக்கலாம். பயிற்சியாளர் என்பவர் ஓரளவுக்கு தான் கற்றுத்தர முடியும். முயற்சி எடுக்க வேண்டியது வீரர்களின் பொறுப்பு. கடின உழைப்பு ஒழுக்கம் போன்ற விடயங்களில் சமரசம் செய்ய முடியாது. தலைவர் கங்குலியோடு பணியாற்றுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை.உலகின் சிறந்த துடுப்பாட்ட வீரர்கள் இந்திய அணியில் உள்ளனர். இவர்களுடன் பணியாற்ற கிடைத்த வாய்ப்பை மிகப் பெரும் கௌரவமாக கருதுகின்றேன் என்றார்.

## சபீர் அகமத்தின் பந்துவீச்சு பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்



பாகிஸ்தான் பந்துவீச்சா[illegible] அகமத்தின் பந்துவீச்சு விதிகளுக்கு முரண்பட்டதாகக் காணப்படுவதால் அவர் இங்கிலாந்து செ[illegible] பரிசோதனைக்குள்ளாக்கப்படவுள்ளதாகக் கூறப்படுகிறது. [illegible]வரது பந்துவீச்சுத் தொடர்பாக பல முறைப்பாடுகள் தமக்குக் கிடைக்கப்பெற்றிருப்பது கவலையளிப்பதாக பாகி[illegible]தான் கிரிக்கெட்சபை அதிகாரி சலீம் அல்டப் பி.பி.சியிட[illegible] தெரிவித்துள்ளார். அத்துடன் அவருக்கு அங்கு பரிசோதனை நடக்கும்போது எங்கு தவறிழைக்கிறார் என்பது தெரிந்துவிடும் என்று கூறியுள்ளார். இவரை சர்வதேச [illegible]கெட் சபையின் உடற்கூற்று நிபுணர் ஒருவர் பரிசோதிப்பார்.

## உள்ளூர் போட்டிகளில் தோனி விளாசல்



உள்ளூர் போட்டியில் தோனியின் விளாசல் தொடர்கிறது. இம்முறை 42 பந்தில் சதம் அடித்தார். கொல்கொத்தாவின் ஈடன்கார்டனில் உள்ளூர் கழக அணிகள் மோதும் சென் கோப்பைக்கான கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இதில் இந்திய அணியின் விக்கெட் காப்பாளரும், துடுப்பாட்ட நட்சத்திர வீரருமான தோனி, ஷியாம்பசார் அணிக்காக விளையாடி வருகிறார். நேற்று முன்தினம் நடந்த அரையிறுதிப் போட்டியில் ஷியாம்பசார், காளிகட் அணிகள் மோதின. முதலில் துடுப்பெடுத்தாடிய காளிகட் அணி 47 ஓவரில் 240 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. நான்கு ஓவர்கள் பந்து வீசிய தோனி 19 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டை வீழ்த்தினார். பின்னர் தொடக்க ஆட்டக்காரராக களமிறங்கிய தோனி அபாரமாக ஆடினார். ஏழு சிக்சர், 13 பவுண்டரிகள் விளாசி 42 பந்தில் சதம் அடித்தார். இவர் 44 பந்துகளில் 102 ஓட்டங்கள் குவித்தார்.



**சிந்தனைக்கு**

அரசியல் என்பது மக்கள் மீது ஆட்சியை நடாத்தும் அல்லது அதிகாரத்தைச் செலுத்தும் விவகாரம் அல்ல; அரசியல் என்பது மக்களுக்குச் சேவை புரியும் பணி; மக்களின் நல்வாழ்வுக்கு ஆற்றப்படும் தொண்டு.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 11-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

## இறுதி வேளை....!

பொதுக்கட்டமைப்பு விவகாரம் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது. அதாவது சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பு விவகாரம் குறித்து தனது இறுதி முடிவைத் தெரிவிக்க வேண்டிய கால கட்டத்திற்குள் வந்துள்ளார்.

அண்மைக் காலத்தில் பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன் எனச் சனாதிபதி சந்திரிகா கூறிவந்துள்ளபோதும், அவர் பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டில் கைச்சாத்திடுவாரா? என்பது இறுதிவரையிலும் கேள்வியாகவே இருந்து வருகின்றது.

ஆனால் தற்போதைய சூழ்நிலையில் அதாவது ஜாதிக ஹெலஉறுமய பாராளுமன்ற உறுப்பினரான பௌத்த பிக்கு ஒருவர் சாகும் வரை உண்ணாவிரதம் நடத்திக் கொண்டிருக்கையிலும் மேலும் பிக்குகள் உண்ணாவிரதம் இருக்கப்போவதாக மிரட்டியுள்ள நிலையிலும்,

ஜே.வி.பி பொதுக்கட்டமைப்பை கைவிடுவதற்கு அரசாங்கத்திற்கு காலக்கேடு விதித்துள்ளதோடு தமது கொள்கை நிறைவேற்றப்படாது போனால் கட்சியைவிட்டு வெளியேறுவோம்'. அதாவது அரசாங்கத்தை கவிழ்க்கவும் தயங்கப்போவதில்லை என எச்சரித்து வரும் நிலையிலும்,

இவை யாவற்றிற்கும்மேலாக பௌத்தபீடமகாநாயக்கர்கள் பொதுக்கட்டமைப்பைக் கைவிடவேண்டுமென அறிவுறுத்தியுள்ள நிலையிலும் பொதுக்கட்டமைப்புக் குறித்து இனியும் சனாதிபதி சந்திரிகாவினால் காலக்கெடு ஒன்றைக் கூறவோ, கோரவோ முடியும் என எதிர்பார்க்க முடியாது.

வேறுவிதமாகக் கூறுவதானால் இனியும் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசாங்கத்தால் இழுத்தடிப்புச் செய்ய முடியாதென்றதொரு நிலை உருவாகியுள்ளது. இந் நிலையிலேயே சந்திரிகா இறுதிமுடிவு எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார் எனலாம்.

ஆகையினால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு குறித்து தனது இறுதி முடிவை மிக விரைவில் வெளிப்படுத்தவேண்டியதாகியுள்ளது. இந்நிலையில் தற்போதுள்ள கேள்வி சனாதிபதி சந்திரிகா தான் கூறிவந்தது போல் பொதுக்கட்டமைப்பில் கையொப்பம் இடுவாரா? அன்றி பௌத்தசிங்களசக்திகளின் கூக்குரலுக்கு அஞ்சிப் பொதுக்கட்டமைப்பைக் கைவிடுவாரா? என்பதே ஆகும்.

சிறிலங்கா அரசியலில் தமிழர் தரப்பினருடன் உடன்பாட்டைச் செய்துகொண்ட சிங்களத் தலைவர்கள் பௌத்த சிங்கள பேரினவாதத்திற்கு அடி பணிந்து போனதே கடந்த கால வரலாறாகும். இந்த வரிசையில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க, டட்லி சேனநாயக்கா போன்றவர்கள் தமிழருடன் உடன்பாட்டை செய்து கொண்டாலும். பின்னர் பேரினவாதிகளுக்குப் பணிந்து போயினர்.

தமிழர் தரப்புடன் செய்துகொண்ட உடன்பாட்டில் சிறிதுகாலத்திற்கேனும் - முழு நிறைவற்ற நிலையில் கூட -ஓரளவு நின்று நிலைத்துவரும் உடன்பாடு போர்நிறுத்த உடன்பாடே ஆகும். இவ் உடன்பாடுகூட சிங்களப் பேரினவாத சக்திகளின் இயலாமை காரணமாக நின்று நிலைத்துள்ளதே ஒழிய அவர்களின் விருப்புடன் நின்று நிலைத்ததாக இல்லை.

இந் நிலையில் சனாதிபதி சந்திரிகாகுமாரதுங்க பொதுக்கட்டமைப்பு குறித்த தனது தெளிவான நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய நிலையில் தற்போதுள்ளார். இவரின் இம் முடிவானது. ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, அரசாங்கத்தின் எதிர்காலத்துடன் மட்டுமல்ல சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் எதிர்காலம், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்எதிர்காலம், நாட்டின் எதிர்காலம் என்பனவற்றுடனும் சம்பந்தப்பட்டதாகும்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூறிக்கொள்வது போன்று பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவாரேயானால் ஐ.ம.சு.முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்படலாம். சிலசமயம் தென்னிலங்கையில் வன்முறைகள் கூட இடம்பெறலாம்,. பொதுத்தேர்தல் ஒன்று கூட வரலாம். ஆனால் இவை நடந்தாலும் சனாதிபதி சந்திரிகாவிற்கும், சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், நாட்டிற்கும் அது நன்மை பயக்கக் கூடும். அடுத்ததேர்தலில் அவரது கட்சி தோல்வியைத் தழுவினும் அவருக்கும், அவரது கட்சிக்கும் எதிர்காலம் ஒன்று இருக்கும்.

ஆனால் சந்திரிகா பொதுக்கட்டமைப்பில் இருந்து பின்வாங்குவாரேயானால் சனாதிபதிக்கும், அவரது கட்சிக்கும், நாட்டிற்கும் அது பாதகமாக அமையும். அவருக்கும், அவரது கட்சிக்கும் எதிர்காலம் என்பது அற்றதாகிவிடும், சிலவேளை சோமவன்ச அமரசிங்க கூறியது போன்று பண்டாரநாயக்க குடும்பஅரசியலின் கடைசி நபராக சந்திரிகா குமாரதுங்கவே இருப்பார் என்பது நிஜமாகிவிடக்கூடும்.

# ஜே. வி. பி அரசாங்கத்தை விட்டு விலகாது

# பொதுக்கட்டமைப்பை உருவாக்கியே தீருவேன்

**- முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களிடம் சனாதிபதி சந்திரிகா கருத்து**

பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதனால் எந்தப் பிரதிபலன் கிட்டினாலும் அதில் கைச்சாத்திட்டே தீருவேன் என சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உத்தேசப் பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திடுவதனால் எந்தப் பிரதிபலன் கிட்டினாலும் அதில் கைச்சாத்திடுவதாகவும் அதன் பின்னர் ஓய்வு பெறவும் தயாராக இருப்பதாகவும், வியாழக்கிழமை அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை சனாதிபதி மாளிகையில் சந்தித்த சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

உத்தேச பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு விலகிவிடும் என அக்கட்சியின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச கூறியுள்ளாரே என முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினவியபோது அவர்கள் அரசாங்கத்தை விட்டு விலகமாட்டார்கள் என தனக்கு உறுதியாகத் தெரியும் என்று கூறியிருக்கும் சனாதிபதி அதிகபட்சமாக வேண்டுமானால் அவர்கள் அமைச்சுப் பதவிகளை இராஜினாமா செய்யக்கூடும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப்புலிகளுடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பில் ஆகக்குறைந்த மட்டத்திலான ஒரு திட்டமே இதுவெனக் குறிப்பிட்ட சனாதிபதி இதில் இன்னும் திருத்தங்களை மேற்கொண்டு இதனைவிடக் குறைவான ஒரு மட்டத்திற்கு அதனைக் கொண்டு செல்ல முடியாதென்றும் அதனால் என்ன வகையான பிரதிபலன் கிட்டினாலும் பரவாயில்லை என இதில் கைச்சாத்திட தான் முடிவு செய்திருப்பதாகவும் கூறினார்.

சுனாமி நிவாரண சபையின் பிரதேச குழுக்களில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதித்துவத்திற்கு சமமான பிரதிநிதித்துவம் முஸ்லிம்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் உத்தேச உடன்படிக்கையில் ஒரு முஸ்லிம் பிரதிநிதியும் கைச்சாத்திட வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்த ஆளும் கட்சியின் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதற்கு இணங்கினால் தான் தங்களால் இந்த கட்டமைப்பிற்கு ஆதரவு வழங்க முடியும் எனவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் சம்பந்தமாக விடுதலைப்புலிகளுடன் ஆராய எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்த சனாதிபதி சுனாமி நிவாரண சபை உடன்படிக்கையில் அரசியல்வாதிகள் எவரும் கைச்சாத்திட மாட்டார்கள் என்றும், தனக்கு கீழ் இருக்கும் செயலாளர் ஒருவரே இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடுவார் எனவும் கூறியுள்ளார்.

சனாதிபதி இந்த உடன்படிக்கையில் கைச்சாத்திட்டால் ஜே.வி.பி அரசாங்கத்தை விட்டு விலகப் போவதாகத் தெரிவித்துள்ளதைப் பற்றி முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் வினவியபோது தான் தமிழத் தேசியக் கூட்டமைப்புடன் இணைந்து நடவடிக்கைகளை முன்கொண்டு செல்வதாக சனாதிபதி இங்கு தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சனாதிபதியுடனான சந்திப்பில் அமைச்சர்கள் பேரியல் அஷ்ரப், ஏ.எச்.எம் பௌசி அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களான நஜீப் எம்.மஜீட், ரிசாத் பதியுதீன், அமீர் அலி, பிரதியமைச்சர்கள் உசைன் பைலா, சேகு இஸதீன், அன்வர் இஸ்மாயில் உட்பட அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

# முஸ்லிம் அமைச்சர்கள் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவு

**-சனாதிபதி செயலகம் தெரிவிப்பு**

(கொழும்பு)

அரசாங்கத்தில் அங்கத்துவம் வகிக்கும் முஸ்லிம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் பொதுக் கட்டமைப்பிற்கு தமது முழு ஆதரவையும் வழங்கஇணக்கம் தெரிவித்ததாக சனாதிபதி செயலக ஊடகப்பணிப்பாளர் பணிமனை அறிக்கை தெரிவிக்கின்றது.

முஸ்லிம் பிரதிநிதித்துவத்திற்கான சில ஏற்பாட்டின் அடிப்படையில் பொதுக்கட்டமைப்பின் அவசியம் குறித்து சனாதிபதியுடனான நேற்று முன்தின சந்திப்பில் இணக்கம் தெரிவித்ததாக அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (32)

# சில அரசியல் கட்சிகள் சுயநலத்திற்காக எதிர்கால சமுதாயத்தை பலிகொடுக்கின்றன

**- டி. எம். ஜெயரட்ண குற்றச்சாட்டு**

(கொழும்பு)

எதிர்கால சமுதாயம் நடைமுறை அரசியல்வாதிகளுக்கு சாபமிடுமென பொதுஜன ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான டி.எம். ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

நடைமுறை அரசின் செயற்பாடுகளைக் குழப்பி தமது அரசியல் இலாபங்களை ஈட்டி இவர்கள் நாட்டை சிக்கலுக்குள்ளாக்கியுள்ளதாகவும் 'அவர் விசனம் வெளியிட்டார்.

சில அரசியற் கட்சிகள் தமது அரசியல் இலாபங்களுக்காக எதிர்கால சமுதாயத்தை பலிகொடுத்திருப்பதாகவும் குறிப்பட்டார். தனிநபர்களும் அரசியற் கட்சிகளும் தத்தமது குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிக்கிறார்களே தவிர நாட்டு மக்களின் வாழ்க்கை பற்றியோ, நாட்டின் எதிர்காலம், ஒருமைப்பாடு பற்றியோ சிந்திக்கிறார்கள் இல்லை. தற்போதைய நிலையில் அரசியல்வாதிகளும், நாட்டைப் பற்றி சிந்திக்கும் புத்தியுள்ள மக்களும் ஒன்றுபட்டு செயற்படுவதே சிறப்பானதாகும் எனத் தெரிவித்துள்ளார். (32)

# சிறுவர், சிறுமியரை அச்சுறுத்தி பௌத்த பிக்கு ஆபாச வீடியோப்படங்கள் தயாரிப்பு!

**- நீதிமன்ற விசாரணையில் அம்பலம்**

(கொழும்பு)

பாலியல் குற்றம் சாட்டப்பட்ட மாத்தறை பிரிவேன பாடசாலையின் அதிபர் வண.கெத்தமான தம்மகித்தி தேரரின் அறையில் இருந்து சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகளால் மீட்கப்பட்ட 26 ஆபாசப்பட வீடியோக்கள் நீதிமன்ற அதிகாரிகள், சட்டத்தரணிகள், பொலிசாருக்கும் காண்பிக்கப்பட்டன. இவற்றைத் தாம் பார்வையிடவேண்டும் என வண.தேரரின் சட்டத்தரணிகள் நீதிமன்றத்திடம் கோரியிருந்தனர். இதனையடுத்து, காலி நீதவானின் உத்தரவின் படி இவை நீதிமன்ற அறை ஒன்றில் புதன்கிழமை பகல் பத்து மணி முதல் மாலைஆறு மணிவரையும் தொலைக்காட்சியில் காண்பிக்கப்பட்டன. இவை உண்மையாகவே ஆபாசப் படங்கள் என்றும், சிறுவர், சிறுமிகளை வைத்து இந்தப் பிக்குவே இவற்றை வீடியோப் படம் எடுத்தார் எனவும் பொலிசார் தெரிவித்தனர். வழக்கு விசாரணை முடியும் வரையும் இவை நீதவானின் பாதுகாப்பில் வைக்கப்பட்டன. பௌத்த மதம் கற்க இவரது பாடசாலைக்கு வருகின்ற சிறுவர், சிறுமிகளுடன் பாலியல் குற்றம் புரிந்ததாகவும், சிறுமி ஒருவரைத் தாயாக்கினார் என்றும் இவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இவர் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். மேல் விசாரணை வேறொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டது.

# பிரதி பொலிஸ்மா அதிபர் பதவி செல்லுபடியற்றது; மூன்று பொலிஸ் அதிகாரிகள் வழக்குத்தாக்கல்

(கொழும்பு)

பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவி செல்லுபடியற்றது என கூறி உயர் நீதி மன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

மூன்று சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் தேசிய பொலிஸ் ஆணைக் குழுத் தலைவர் உட்பட 22 பேர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர். பிரதி பொலிஸ் மா அதிபர் பதவிகளுக்கு தரம் உயர்த்தப்படுவதற்கு சகல தகுதிகளும் தங்களுக்கு இருப்பதாகக் குறிப்பிட்டுள்ள மனு தாரர்கள் தங்களுக்குப் பதவிஉயர்வு வழங்கப்படாமல் ஏனையோர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதால் தங்களது அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பிரதிப் பொலிஸ் மா அதிபர்களாக தரம் உயர்த்தப்பட்டமையை இரத்து செய்வதற்கு இடைக்காலத் தடை உத்தரவொன்றை பிறப்பிக்குமாறும் மனுதாரர்களுக்கு பதவி உயர்வு வழங்குமாறு உத்தரவிடுமாறும் இந்த மனுவில் மேலும் கோரப்பட்டுள்ளது.

# சுதந்திரபுரம் படுகொலை நினைவு நாள் நேற்று உணர்வுடன் கடைப்பிடிப்பு!


புதுக்குடியிருப்பில்


சுதந்திரபுரத்தில்

(அலுவலக செய்தியாளர்)

சுதந்திரபுரம் படுகொலை மற்றும் லெப். கேணல் அன்பு அல்லது அம்மாவின் ஏழாம் ஆண்டு நினைவு நாள் என்பன நேற்று சுதந்திரபுரத்திலும், புதுக்குடியிருப்பிலும் உணர்வு பூர்வமாக நினைவு கூரப்பட்டது.

சிறிலங்கா வான்படையினரின் தாக்குதலாலும் மற்றும் இராணுவ முகாம்களில் இருந்து ஏவப்பட்ட எறிகணை வீச்சுக்களாலும் 1998-06-10 அன்று படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் நினைவு நாள் நிகழ்வுகளும் லெப். கேணல் அன்பு/அம்மாவின் ஏழாம் ஆண்டு நினைவு நாளையும் ஒட்டிய அஞ்சலி நிகழ்வுகள் நேற்று சுதந்திரபுரம் சந்தியில் உள்ள பொது மைதானத்தில் உணர்வெழுச்சியுடன் நடைபெற்றன.

மாலை ஐந்து மணியளவில் ஆரம்பமான நிகழ்வின் பொதுச் சுடரினை தூயவன் அரசறிவியல் கல்லூரிப் பொறுப்பாளர் பார்த்தீபன், முல்லை மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் செல்வன் ஆகியோர் ஏற்றி வைக்க, உடையார்கட்டுப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் புகழரசன் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து இரவு ஏழு மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகளில் முன்னதாக இப்படுகொலைச் சம்பவத்தில் சாவடைந்த பொதுமக்களினதும், லெப்.கேணல் அன்பு/அம்மாவின் திருவுருவப்படத்திற்கும் சுடரேற்றி மலர்மாலை அணிவிக்கப் பட்டது.

சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணி தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் லெப். கேணல் அன்பு/அம்மாவின் படத்திற்கு சுடரேற்றி மலர் மாலை அணிவித்து வைக்க தொடர்ந்து ஏனையோரின் படங்களுக்கு பொறுப்பாளர்களும் உறவினர்களும் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

அடுத்து சுதந்திரபுரம் கிராம சேவகர் சுந்தரலிங்கத்தின் வரவேற்புரையுடன் ஆரம்பமான மேடை நிகழ்வுகளில் இந்நினைவு நாளையொட்டி நடாத்தப்பட்ட மரதனோட்டப் போட்டிகளிலும் மற்றும் ஏனைய விளையாட்டுக்களிலும் வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பரிசில்கள் வழங்கப்பட்டன. தொடர்ந்து சங்கநாத குழுவினரின் நிகழ்வும் இடம்பெற்றன. சிறப்புரையினை சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் தளபதிகளில் ஒருவரான அமிர்தாப் நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் போராளிகள் உட்பட பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

அதேசமயம் லெப்டினன் கேணல் அன்பு அவர்களின் நினைவு நாளும், சுதந்திரபுரம் படுகொலையின் ஏழாம் ஆண்டு நினைவு நாளும், புதுக்குடியிருப்பு ஆனந்தபுரம் பகுதியிலும் நேற்று அனுஷ்டிக்கப் பட்டது.

காலை 9.00 மணியளவில் ஆரம்பமான இந் நிகழ்வில் பொதுச்சுடரினை நிதித்துறை ஆளுகைப் பொறுப்பாளர் பா.முகிலனும், தேசியக் கொடியினை நிதிப் பொறுப்பாளர் யோ.தமிழ்க்குமரனும் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து அரங்க நிகழ்வுகளும் இடம்பெற்றன. இதில் சிறப்புரையினை விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா.வே பாலகுமாரனும், வணிக ஒன்றியப் பொறுப்பாளர் வெற்றியரசனும், ஆற்றினர். மாலை, மைதான நிகழ்வுகளும் இடம்பெற்றன. லெப்டினன் கேணல் அன்பு நினைவாக நிகழ்த்தப்பட்ட விளையாட்டு நிகழ்வுகளில் வெற்றிபெற்ற வீரவீராங்கனைகளுக்கு பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம் பெற்றதுடன், தமிழீழ மகளிர் இசைக் குழுவின் கலை நிகழ்வும் இடம்பெற்றது.(ச, தீ,சு, 15)

## அதிகாரபூர்வ கருத்தல்ல

**—வை கோ தெரிவிப்பு**

இந்தியா- சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பநதம் விரைவில் ஏற்படுத்தப்படும் என்று இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர்சிங் கொழும்பில் தெரிவித்துள்ள கருத்து மிகவும் துரதிர்ஷ்ட வசமானது. இது மன்மோகன்சிங் அரசின் அதிகார பூர்வ கருத்தாக இருக்க முடியாது என்று மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக பொதுச் செயலாளா வைகோ தெரிவித்தார். பி.பி சிக்கு கருத்துத் தெரிவித்த அவர் அவ்வாறு ஒப்பந்தம் உருவாக்க முயற்சிப்பார்களானால் அதனைக் கடுமையாக எதிர்ப்போம். ஒப்பந்தம் கையெழுத்திடப்படமாட்டாது என்பதில் முழுநம்பிக்கை இருக்கின்றது என்றார்.

## உறுதியான...

தரப்பினரே அடிக்கடி வெவ்வேறு நிலைப்பாடுகளைத் தெரிவித்து வருகின்றனர். சந்திரிகா ஒரு நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் போது. பிரதமர் அதற்குப் பின்னர் வேறொன்றைக் கூறுகின்றார். இதேவேளை ஜே.வி.பியினர் இருப்பது இன்னும் ஒரு நிலைப்பாட்டில், கூட்டணி அரசில் ஒவ்வொரு கட்சிகளும் முரண்பட்ட கருத்துக்களையே தெரிவிக்கின்றன.

அவர்கள் இவ்வாறு தத்தமது எண்ணங்களை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றார்களே தவிர பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவோ அல்லது அதன் தன்மை குறித்தோ இதுவரை தீர்மானம் எதுவும் எடுக்கவில்லை.

இதனால் என்ன நடக்கின்றது என்ற பாரிய கேள்வியொன்று எழுந்து நாடு முழுவதும் ஸ்திரமற்ற சூழ்நிலை ஒன்று உருவாகியுள்ளது. எனவே நாட்டின் நிலைமைகளை மேலும் நெருக்கடிக்கு உள்ளாக்காமல் பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக உடனடியாகத் தீர்மானத்திற்கு வரவேண்டியதே தற்போதைய சூழ்நிலையில் அரசாங்கத்தின் பொறுப்பாகும். அத்தோடு அத்தீர்மானம் தொடர்பாக மக்களுக்கு தெளிவுபடுத்தவும் வேண்டுமென வலியுறுத்தியுள்ளார்.

## உத்தேசிக்கப்பட்ட...

பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படும் அதேவேளை, பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பின் சில வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்திய சிலர் மீது கண்ணீர்ப்புகை பிரயோகிக்கப் பட்டதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

எதிர்ப்பு ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்கள் தம்மோடு கொண்டு வந்த மகஜர் ஒன்றை சனாதிபதியின் செயலாளரிடம் கையளித்தனர்.

விகாரமாதேவி பூங்காவிலிருந்து எதிர்ப்பு ஊர்வலமாக சென்றவர்களே சனாதிபதி செயலகம் வரை சென்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது தேசிய பிக்குகள் முன்னணியினர் கூட்டமொன்றை நடத்தினர். இக்கூட்டத்தில் கலந்து கொண்ட மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கோரிக்கைகளுக்கு உகந்த சாதகமான பதில் கிடைக்காவிட்டால் கடும் செயற்பாடுகள் எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

இதன்போது சனாதிபதி மாளிகைக்குச் செல்ல முயன்றபோது சனாதிபதியின் சார்பில் பதில் ஒன்று வழங்கப்பட்டதாகவும், அதாவது, உத்தேச பொதுக்கட்டமைப்பு தொடர்பாக தற்போது பேச்சுவார்த்தை மாத்திரமே மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர்களுக்கு பதில் வழங்கப்பட்டது. எனினும் இதில் தேசிய பிக்குகள் முன்னணியினர் திருப்தி அடையவில்லையெனவும், இதன்போது அங்கு குழப்பநிலை ஒன்று ஏற்பட்டதாகவும். இதனையடுத்தே பொலிசார் கண்ணீர்ப் புகைப் பிரயோகம் மேற்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. அத்துடன் தண்ணீரும் பாய்ச்சியடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. பொலிசார், இராணுவத்தினர், விசேட அதிரடிப்படையினர் ஆகியோர் அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.(32)

## சனாதிபதியின்....

வாசஸ்தலத்தில் பேச்சுவார்த்தையும் நடைபெற்றது. இந்தப் பேச்சுவார்த்தையில் ஜாதிக ஹெலஉறுமயவின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்னதேரரும் கலந்து கொண்டார்.

பேச்சுவார்த்தையின் பின்னர் மல்வத்தை மகாநாயக்க தேரருடன் சனாதிபதியின் தூதர்கள் உண்ணா நோன்பிருக்கும் தேரரை சந்திக்கச் சென்றனர். எனினும் சனாதிபதியின் கடிதத்தை நிராகரித்த ஓமல்பே சோபித்ததேரர் தனது சாகும்வரை உண்ணாவிரதத்தைத் தொடர்வதாக அறிவித்தார். சனாதிபதியின் கடிதத்தில் அடங்கியுள்ள விடயங்கள் தம்மைப் திருப்திப்படுத்தவில்லை என ஜாதிக ஹெலஉறுமயவினர் தெரிவித்தனர்.

இதேவேளை இந்த உண்ணாவிரதப் போராட்டம் குறித்து கருத்து வெளியிட்ட ஜாதிக ஹெலஉறுமயவின் பேச்சாளர் நிஸாந்த சிறீ வர்ணசிங்க சனாதிபதி அனுப்பிய கடிதத்தை ஏற்க முடியாது என அத்துரலியே ரத்னதேரர் அறிவித்தார். விடுதலைப் புலிகளுடன் இது தொடர்பாக பத்திரங்கள் தயாரிக்கப்பட்டு வருவதாகவும், இறுதி வரைபு தயாரிக்கப்பட்டு முடிவுற்றதும் அது தொடர்பில் மகாநாயக்க தேரர்களிடம் கருத்து அறிவதாக சனாதிபதி கடிதத்தில் தெரிவித்துள்ளார். இதனைத் தாம் ஏற்றுக் கொள்ளமுடியாது. என்று குறிப்பிட்டுள்ளார்.

## மகாநாயக்கர்களுடன்...

களின் அனுமதியின்றி எவ்வித கட்டமைப்பும் கைச்சாத்திடப்பட மாட்டாதென உறுதியளித்துள்ளார்.

சனாதிபதியின் பதில் கடிதத்தை அமைச்சர் ரோகித போகொல்லாகமவும், பாராளுமன்ற உறுப்பினர் விஜயதாஸ ராஜபக்ஷவும் நேற்று வெள்ளிக்கிழமை மகாநாயக்கர்களிடம் கையளித்தனர்.

இதேவேளை, நேற்று மாலை மாகாநாயக்கர்களை நேரடியாக அழைத்துப் பேசிய சனாதிபதி பொதுக்கட்டமைப்பு சிறிலங்காவின் இறைமையை எவ்விதத்திலும் பாதிக்காது என்று குறிப்பிட்டதுடன் இந்தப் பொதுக்கட்டமைப்பு சுனாமி தாக்கிய கடற்கரைப் பகுதிகளில் மட்டுமே அதுவும் ஓராண்டு மட்டுமே செயற்படும். இது பற்றிய இறுதி முடிவும் பௌத்த சங்கத்தினருடனும் கலந்து பேசியே எடுப்பேன் என்றும் கூறியதாகவும் சனாதிபதியின் செயலாளர் டபிள்யூ ஜே.எஸ். கருணாரட்ண கூறியுள்ளார்.

எனினும் சனாதிபதியின் இந்த விளக்கமளிப்புக்கு மகாநாயக்க தேரர்கள் எவ்வாறான பதிலை அளித்தனர் என்பது குறித்த தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. (32)

# இரு இளைஞர் கொலையைக் கண்டித்து குருநகரில் இன்று பூரணஹர்த்தால்

(நல்லூர்)

குருநகர் பகுதியில் இன்று அனைத்து நிறுவனங்களையும் மூடி பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

கொழும்பு கொச்சிக்கடைப் பகுதியில் குருநகர் பகுதியைச் சேர்ந்த இரு இளைஞர்கள் இனம் தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டுக்கு உள்ளாகிபலியானதை கண்டித்தும், பூரண விசாரணை நடத்த வலியுறுத்தியும் இப் பகுதிப் பொதுஅமைப்புக்கள் இக் ஹர்த்தாலை மேற்கொள்ளவுள்ளதுடன் இதற்கான நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

அத்தோடு சனாதிபதிக்கு குருநகர் பகுதி பொது அமைப்புக்கள் மகஜர் ஒன்றைக் கையளிக்கவுள்ளன. இன்று பிற்பகல் 2.00 மணிக்கு குருநகர் கலையரங்கத்தில் இடம்பெறும் இறுதி அஞ்சலி நிகழ்வைத் தொடர்ந்து மனித உரிமைகள் ஆணைக்குழு மூலம் மகஜர் சனாதிபதிக்கு கையளிக்கப்படவுள்ளது. (41)

# மிருசுவிலில் மீட்கப்பட்ட சடலம் இனங்காணப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். தென்மராட்சி மிருசுவில் பகுதியில் சூட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மிருசுவில் தொட்டிலடி அம்மன் கோவிலடியில் மீட்கப்பட்ட இச் சடலம் யாழ். வசாவிளானைச் சேர்ந்த இராசையா பாலகிருஷ்ணன் (வயது-60) என்பவருடையது என வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையில் வைத்து நேற்று நண்பகல் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டுள்ளது.

வசாவிளானைச் சேர்ந்த இவர் நான்கு பிள்ளைகளின் தந்தை என்றும் முறிவு நெரிவு வைத்தியர் என்றும் இவர் வசாவிளானில் இருந்து இடம்பெயர்ந்து மிருசுவில் றோமன்கத்தோலிக்க தமிழ்கலவன் பாடசாலைக்கு அண்மையாக தற்காலிகமாக குடியேறி வாழ்ந்து வந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சடலம் மிருசுவிலில் உள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயத்தை அண்டிய பகுதியில் இருந்து மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(33,27,கா)

# இந்திய-சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திட நடவடிக்கை

*– கொழும்பில் நட்வர்சிங் அறிவிப்பு*

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கும், இந்திய அரசுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன என்று சிறிலங்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ள இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கூறினார்.

நேற்று முன்தினம் வருகை தந்த அவர் நேற்றுக் கொழும்பில் ஊடகவியலாளர்களைச் சந்தித்த போது சர்ச்சைக்குரிய இந்திய சிறிலங்கா பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிக் கூறினார்.

சிறிலங்காவிற்கும், இந்தியாவுக்கும் இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் தொடர்பான பேச்சுக்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளினதும் பாதுகாப்பு கட்டமைப்புக்களுக்கு இடையில் நல்றுறவை அளித்துள்ளது.

ஒப்பந்தத்தை இறுதியாக்கும் வேலைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என்றார் அவர்.

பாதுகாப்பு ஒப்பந்தம் பற்றிய மேலதிக தகவல்கள் எதனையும் வெளியிட மறுத்த நட்வர்சிங் சிறிலங்காவின் 450 பொலிசாருக்கான பயிற்சி வழங்கும் நடவடிக்கை ஒன்றை இந்தியா விரைவில் தொடங்கவுள்ளது என்றார்.

பொதுக்கட்டமைப்பு தொடர்பான கருத்துக் கூறிய நட்வர்சிங் இது முழுமையாக சிறிலங்காவின் உள்நாட்டு விடயம். இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் வழியிலேயே தீர்வுகாண பேச்சுக்களை நடத்த வேண்டும் என்றார்.

இந்திய அமைச்சருடன் சிறிலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்மன் கதிர்காமரும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்தது கொண்டார்.

இந்தியா வழங்குவதாகக் கூறியுள்ள வான்பாதுகாப்பு ரேடார் தொகுதியை பெற்றுக் கொள்வீர்களா என்று கதிர்காமரிடம் கேட்டபோது

நிச்சயமாக ஏற்றுக்கொள்வோம் இது தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்று வருகின்றன. அதனை எவ்வாறு பெற்றுக்கொள்வது என்பது குறித்த வழிவகைகளை ஆராய்ந்து வருகிறோம் என்றார்.

## அரச..

இருந்தபோதும் இந்திய வெளியுறவு அமைச்சர் நட்வர் சிங்கின் விஜயம் முடிந்த பின்னரே அது இடம்பெறக் கூடுமென்று தெரிவிக்கப்படுகிறது(32)

## பொதுக்கட்டமைப்பு...

நிலைப்பாட்டில் இருந்து அரசாங்கம் விலகாத பட்சத்தில் தாம் 16ஆம் திகதி அரசாங்கத்தில் இருந்து விலகப் போவதாக வலியுறுத்திக் கூறினார்.

உத்தேச பொதுக் கட்டமைப்பிற்கு நாம் தொடர்ச்சியாக எதிர்ப்பினை தெரிவித்து வருகின்றோம். ஆனால் சனாதிபதி அந்த எதிர்ப்புக்களை பொருட்படுத்தாது பொதுக் கட்டமைப்பு உடன்பாட்டிக் கையில் கைச்சாத்திட முடிவு செய்துள்ளார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 11 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது